


விலை ரூபா 40
பக்கங்கள் - 12

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 41 குரோதி வருடம்
கார்த்திகை மாதம் 20 ஆம் திகதி வியாழக்கிழமை (05.12.2024)






சன்சுல் செஹன்ஷா லக்மால் (Sansul Sehansha Lakmal) என்ற 11 வயது சிறுவன் 1,200 ரூபிக்ஸ் கியூப்களை பயன்படுத்தி 91 அங்குல உயரமும் 68 அங்குல அகலமும் கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பாரிய உருவப்படத்தை உருவாக்கி உலக சாதனை படைத்துள்ளான்.

## வடக்கில் ஒரு சட்டம்: தெற்கில் ஒரு சட்டம்:

# தயாசிறியின் கருத்தால் சபையில் சொற்போர்



(சுப்ரமணியம் நிஷாந்தன்)

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் தெற்கில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் வடக்கில் குற்றவியல் சட்டத்தையும் பயன்படுத்துவதாக நாடாளுமன்றில் நேற்று எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியது. என்றாலும், எதிர்க்கட்சி மீண்டும் இனவாதத்தைத் தூண்டும் வகையில் பொய்யான கருத்துகளைப் பரப்ப முற்படுவதாக ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டை நிராகரித்ததுடன், அனைவருக்கும் பொதுவான சட்டத்தையே ஆளுங்கட்சி கடைப்பிடிப்பதாகவும் கூறியது.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான இரண்டாம் நாள் விவாதம் நேற்றுப் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

இதில் உரையாற்றிய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, (தொடர்ச்சி) 02



# புலம்பெயர் தமிழர்கள் தாயகம் திரும்ப வழிசெய்ய வேண்டும்

## யுத்தத்தில் உயிரிழந்த தமிழ், முஸ்லிம், சிங்கள இளைஞர்களுக்கு அர்ச்சுனா எம்.பி. அஞ்சலி

(ஆர்.மனோசங்கர்)

நாட்டில் சமாதானம் மற்றும் சமத்துவம் நிலவ வேண்டும் என்பதற்காக தன்னுயிர் நீத்த ஈழ உறவுகளுக்கும், அதேபோல் சிங்கள மற்றும் முஸ்லிம் உறவுகளையும் நினைவுகூருவதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். தமது உரையில் அவர் "மேதகு தலைவர் அவர்களுக்கு வீரவணக்கத்தை செலுத்துவதாகவும்" கூறினார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரைமீது நேற்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தனது முதல் உரையை ஆற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். "வரலாற்றை அர்ப்பணிப்பிலிருந்து ஆரம்பிக்க ஆசைப்படுகின்றேன். (தொடர்ச்சி.) 02



# டில்லியை சமாளிப்பாரா அநுர? உற்றுநோக்கும் சர்வதேசம்

## - ரணிலின் இரகசிய நகர்வு எதற்கு?

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

ஜனாதிபதி அநுரகுமாரவின் இந்திய பயணத்துக்கு முன்பு இடம்பெற்றுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்தியப் பயணம் சர்வதேச ரீதியில் கவனத்தை ஈர்க்கும் முக்கியத்துவம் வாய்ந்ததொரு பயணமாக இராஜதந்திர மட்டத்தில் அவதானிக்கப்படுகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இம்மாதம் மூன்றாம் வாரத்தில் இடம்பெற உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

என்றாலும், ஜனாதிபதி தமது முதாலாவது வெளிநாட்டுப் பயணத்தை மத்திய கிழக்கு நாடொன்றுக்கு மேற்கொள்ள



தேர்தலுக்கு முன்னர் திட்டமிட்டிருந்தாக தெரியவருகிறது.

இதற்கு காரணம் மூன்று மத்திய கிழக்கு நாடுகளிடம் சலுகை விலையில் எரிபொருளைக் கொள்வனவு செய்ய அநுரகுமார திசாநாயக்க, அமெரிக்காவில் உள்ள இலங்கை (தொடர்ச்சி...) 02

# 13 தொடர்பில் ரில்வின் மீண்டும் விளக்கம்



(சுப்ரமணியம் நிஷாந்தன்)

புதிய அரசியலமைப்பில் சிறந்த தீர்வு நடைமுறைப்படுத்தப்படும் வரை 13ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்படாது. அது தொடர்பில் சகல தரப்பினருடனும் ஆக்கப்பூர்வமான கலந்துரையாடல்கள் நடத்தப்படும் என்றே நான் கூறினேன் (தொடர்ச்சி...) 02

## கொள்ளைபோன சொத்துக்களை மீளப்பெற புதிய சட்டம்

(பாலகணேஷ் டிலுக்ஷா)

கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்களை மீளப்பெறும் நோக்கில் 03 புதிய சட்டமூலங்கள் அடுத்த காலாண்டின் தொடக்கத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார். நேற்றைய (04) நாடாளுமன்ற அமர்வின் போதே அவர் இதனைக் (தொடர்ச்சி.) 02

## பாதுகாப்புக்கு ஒரு துப்பாக்கி வழங்கத் தீர்மானம்

( பாலகணேஷ் டிலுக்ஷா)

உயிர் பாதுகாப்புக்காக, அதிகபட்சம் ஒரு துப்பாக்கி மாத்திரம் வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது

துப்பாக்கிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பின்னரே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஒருவர் ஒன்றுக்கு (தொடர்ச்சி...) 02

# அரசியல் இலஞ்சமாக மதுபான லைசன்ஸ் வழங்கிய ரணில்

## பட்டியலை வெளியிட்டது அரசு

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அரசியல் இலஞ்சமாக 362 மதுபான அனும திப்பத்திரங்கள் 2024ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் செப்டம்பர் மாதம் 21ஆம் திகதிவரை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்ட மதுபான அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான தகவல்களை அமைச்சரும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க நேற்று புதன்கிழமை வெளியிட்டார். "இக்காலப் பகுதியில் மொத்தமாக 362 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 172 அனுமதிப்பத்திரங்கள் FL4 எனப்படும் சில்லறை மதுபான விற்பனை (தொடர்ச்சி...) 02

# தோட்ட மக்களின் காணிகள் தொடர்பில் உலக வங்கியுடன் ஜனாதிபதி ஆராய்வு

அரசாங்கத்தின் க்ளீன் ஸ்ரீ லங்கா (Clean Sri Lanka) வேலைத்திட்டத்திற்கு உலக வங்கியின் உதவிகள் வழங்கப்படு மென உலக வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பரமேஷ்வரன் ஐயர் தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நேற்று (04) ஜனா திபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாய க்கவைச் சந்தித்து கலந்துரையாடிய போதே (தொடர்ச்சி...) 02

## அரசியல் கைதிகள் விடுதலையில் அரசு கவனமெடுப்பது அவசியம்

( ஆர்.மனோசங்கர்)



பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் அரசி யல் கைதிகளை விடுதலை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் சாணக்கி யன் இராசமாணிக்கம் கோரிக்கை விடுத்துள்ளார். ஜனாதிபதியின் சிம்மாசன உரை மீது நாடாளுமன்றில் (தொடர்ச்சி.) 02

## தென்கொரிய இராணுவ ஆட்சிக்கு எதிரான அறிவிப்புக்கு - ரணில் பாராட்டு

(பாலகணேஷ் டிலுக்ஷா)

இராணுவச் சட்ட ஆட்சியை எதிர்ப்பதற் காக, கொரிய குடியரசின் தேசிய சபை எடுத்த துரிதமான மற்றும் ஒன்றிணைந்த நடவடிக்கையை பாராட்ட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கி ரம சிங்கவிடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோலின் இராணுவச் சட்டப் பிரகடனம் கொரியக் குடியரசின் (தொடர்ச்சி...) 02

## தட்டுப்பாட்டை தவிர்க்க அரசு கூறும் யோசனை

(பாலகணேஷ் டிலுக்ஷா)


எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை தட்டுப்பாடின்றி வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

லங்கா சதொச ஊடாக ஒரு கிலோ கிராம் அரிசியை (தொடர்ச்சி) 02

# ஐ.நா. சிறுபான்மையினர் அமர்வு: இலங்கை முஸ்லிம்கள் பற்றி பிரஸ்தாபம்

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

ஐ.நா மன்றத்தின் சிறுபான்மையினர் பிரச்சினைகளுக்கான அமர்வில் முதன் முறையாக இலங்கை முஸ்லிம்கள் பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஐ.நா மன்றத்தின் சிறுபான்மையினர் பிரச்சினைகளுக்கான 17வது அமர்வு நவம்பர் 28, 29 ஆகிய இருதினங்களில் ஜெனீவாவில் இடம்பெற்றது. ஜெனீவா மனித உரிமைகள் ஆணையகத்தில் (தொடர்ச்சி...) 02




## ஜனாதிபதியின் கொள்கை உரை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் வாக்கெடுப்பின்றி நேற்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. (தொடர்ச்சி) 02

## தமிழர்களுக்கு எதிரான அரசியல் போரை அரசாங்கம் தீவிரப்படுத்தும்

### அருட்தந்தை மா.சக்திவேல்



(பாலநாதன் சதீசன்)

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக் காலம் என்பது வட,கிழக்கு தமிழர்களின் அரசியலுக்கு எதிரான உக்கிரமான அரசியல் போர்க்காலமாக இருக்கும் என்பதற்கான (தொடர்ச்சி...) 02

**மனிதத்தின் குரலாக - உங்களில் ஒருவனாக : ஒருவன்**

## ஐ.நா...

சிறுபான்மையினரின் உரிமைகள் சம்பந்தமாக எடுத்துக் கொள்ளப்பட்டபோது அங்கே இலங்கை முஸ்லிம்களின் நிலைமை தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

இது வரலாற்றில் முதல் தடவையாக இலங்கை முஸ்லிம்களின் நிலைமை பற்றி எடுத்துச் சொல்லப்பட்ட சந்தர்ப்பமாகும். இதுபற்றி நல்ல வரவேற்பிருந்ததாக இந்த விடயத்தை ஐநா மனித உரிமைகள் ஆணையகத்தின் கவனத்திற்கு எடுத்துச் சென்ற கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.எல்.எம்.புஹாரி முஹம்மத் தெரிவித்தார்.

அவர் ஐநா மனித உரிமைகள் ஆணையகத்திற்குச் சமர்ப்பித்த அறிக்கையில் – தெரிவித்துள்ளதாவது, இலங்கை அரசாங்கம் இன, மத பாகுபாடுகளைக் கண்காணித்து நிவர்த்தி செய்வதற்கும் கடந்தகால மத அட்டூழியங்கள் மற்றும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுக்கு பொறுப்புக்கூறல் உட்பட அனைவருக்கும் சம நீதியை உறுதி செய்வதற்கும் ஒரு குறிப்பிட்ட சட்டக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

இறுதியாக, இலங்கையின் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து, சிறுபான்மையினரின் சமத்துவம் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களை உறுதிப்படுத்துமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு ஐ.நா மனித உரிமைகள் பொறிமுறைகள் மற்றும் அதன் உறுப்பு நாடுகளுக்கு நான் வேண்டுகோள் விடுக்கிறேன்." என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தோட்ட மக்களின்...

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தோட்ட மக்களின் காணி மற்றும் வீட்டுப் பிரச்சினைகள் மற்றும் வடக்கு கிழக்கு மக்கள் நீண்டகாலமாக முகம்கொடுத்திருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடுவது குறித்தும் இதன்போது பேசப்பட்டது முக்கிய விடயமாகும்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஜனாதிபதி தலைமையிலான புதிய அரசாங்கத்துக்கு வாழ்த்து தெரிவித்த உலக வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர், உலக வங்கியின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் அனைத்துத் திட்டங்களும் எதிர்காலத்திலும் அவ்வண்ணமே முன்னெடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

அதேபோல் புதிய அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டம், கிராமிய வறுமையை ஒழித்தலுக்கான திட்டங்கள், பொருளாதார டிஜிட்டல் மயமாக்கல் வேலைத்திட்டத்துக்கு இணையான டிஜிட்டல் அடையாள அட்டை வழங்குவதற்கான வேலைத்திட்டம் என்பன குறித்தும் ஜனாதிபதி நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்நாட்டில் விவசாயம், மீன்பிடித்துறை, சுற்றுலா, கல்வி மற்றும் சுகாதார துறைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதன்போது சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தின் அடுத்தகட்ட அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்த ஒத்துழைப்பு வழங்கும் வகையில் முதற்கட்டமாக, இந்நாட்டு ஆலோசனைக் குழுவொன்றுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாகவும் உலக வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அரசாங்கத்தின் ஊடநயெ ளுசை டுயமெய வேலைத்திட்டத்துக்கும் பாராட்டு தெரிவித்தார். தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோர் இதன்போது கலந்துகொண்டனர்.

## தென்கொரிய...

ஜனநாயக அமைப்பை அச்சுறுத்தியுள்ளதாகக் கூறிய அவர் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் மற்றும் நிர்வாகத்தை ஆதரிப்பவர்களின் ஒற்றுமை சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## பாதுகாப்பு...

மேற்பட்ட துப்பாக்கிகளுக்கு விண்ணப்பித்தால், பாதுகாப்பு பகுப்பாய்வு நடத்தப்படும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. பகுப்பாய்வின் மூலம் வெளிப்படுத்தப்படும் உண்மைகளின் அடிப்படையில் மேலும் துப்பாக்கிகளை வழங்குவதா இல்லையா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புலனாய்வு அமைப்புகளால் இந்த பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

துப்பாக்கி வைத்திருப்பவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு பகுப்பாய்வின் போது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படாத பட்சத்தில் துப்பாக்கிகளை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகள் கணக்கெடுப்பு தற்போது பாதுகாப்பு அமைச்சின் வளாகத்தில் நடத்தப்படுகிறது. பொதுமக்களுக்காக 1550 துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## தமிழர்களுக்கு...

அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளதாக சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ள அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசியல் களச் சூழ்நிலை அறிந்து எமக்கிடையிலான பலமான அரசியல் கூட்டு கட்டமைப்பு உருவாக்கினால் மட்டுமே நாம் எதிர்நோக்கும் அரசியல் போரினை எதிர்கொள்ள முடியும்.

தமிழ் மக்கள் பேரவையினால் முன்வைக்கப்பட்ட அரசியல் பிரேரணைகளை மையப்படுத்தி பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான ஆயத்த பேச்சுவார்த்தையினை தமிழ் தேசிய முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும் தமிழரசுக் கட்சியின் தலைவர் சிறீதரனுக்கும் இடையில் ஆரம்பித்திருக்கும் பேச்சுவார்த்தையை வரவேற்பதோடு இக்கூட்டு செயற்பாடு நாடாளுமன்றத்திற்குள்ளும் அதற்கு வெளியிலும் கொள்கை ரீதியில் பலமடைய வேண்டும். விரிவடைய வேண்டும்.

புலம்பெயர்ந்தோர் அமைப்புக்களும் தடம் மாறாது களத்திலும் புலத்திலும் அரசியல் கடப்பாட்டினை நிறைவேற்ற துணை நிற்க வேண்டும். அன்று பொங்கு தமிழாக அதனைத்தொடர்ந்து தமிழ் மக்கள் பேரவையாக திரண்டது போன்று மீண்டும் மக்கள் அரசியலும் அதற்கான கூட்டு செயல்பாடும் கொள்கை ரீதியில் விட்டுக் கொடுப்புக்கள் இன்றி பலமடைய அனைவரும் அரசியல் முதிர்ச்சியோடு தம் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் எனவும் கேட்கின்றோம்.

நாட்டின் நிறைவேற்று அதிகாரத்தையும் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி அடுத்து வரும் உள்ளூ ராட்சி மன்ற தேர்தலிலும், மாகாண சபை தேர்தலிலும் முழு நாட்டையும் தமதாக்கிய பின்னர் யாப்பு சீர்திருத்தம் எனும் போர்வையில் தமிழர்களுக்கு எதிரான அரசியல் போரை தீவிரப்படுத்தும்.

தமிழர் எதிர்கால அரசியல் நலன் கருதி கடந்த கால அரசியல் குரோதங்கள், போட்டியை அரசியல், காட்டிக் கொடுப்புக்கள், சலுகை அரசியல் என்பவருக்கு இடம் கொடுக்காது பெரும் தேசிய வாதத்தினை தேசமாக மக்களோடு சேர்ந்து எதிர் கொள்ள கொடுக்கவும் பேச்சு வார்த்தை தொய்வும் தோல்வியையும் சந்திக்காது முன்னோக்கி நகர்ந்து செல்லும் பொறுப்பும் கடப்பாடும் தமிழ் தேச உணர்வாளர்களுக்கு அவசியம் என்று தெரிவித்துள்ளார்.

## புலம்பெயர்...

என் உயிரிலும் மேலான, என் இனத்தின் மானம் காத்த வீரத் தமிழன், இருந்தால் தலைவன்... இல்லையேல் இறைவன் எனப் போற்றப்படுகின்ற அன்புக்கும், மதிப்பிற்குரிய மேதகு அவர்களுக்கும், அவர் காட்டிய வாழ்வில் உயிரைத் துச்சமென மதித்து என் இனத்தின் மானம் காத்த வீர மறவர்களுக்கும், அதேபோல் இதுவரை காலமும் நடந்த இந்த கோர யுத்தத்தால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த சகல தமிழ், முஸ்லிம், சிங்கள இளைஞர்களுக்கும், முக்கியமாக ரோஹன விஜேவீர மற்றும் அவர்களுடைய தோழர்களுக்கும் எனது வீர வணக்கத்தையும், அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்" எனக் கூறி அர்ச்சுனா எம்.பி தமது உரை ஆரம்பித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், "வடக்கு மாகாண மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி இந்தச் சபைக்கு நான் தெரிவுசெய்யப்பட்டுள்ளேன். மிகவும் பொறுப்புடனும், நன்றியுடையவனாகவும் இதனைக் கூறிக்கொள்கின்றேன். இந்நாட்டில், சமாதானம் மற்றும் சமத்துவத்தை அடைய வேண்டும் என்பதற்காக தன்னுயிரை நீத்த ஈழ உறவுகளுக்கும், அதேபோல் சிங்கள மற்றும் முஸ்லிம் உறவுகளையும் இந்த இடத்தில் நினைவுகூர விரும்புகின்றேன். இந்த நேரத்தில் எனது தந்தையையும் நினைவுகூர கடமைப்பட்டுள்ளேன். அவர் 1966ஆம் ஆண்டு இலங்கை பொலிஸ் கால்பந்தாட்ட அணியின் தலைவராகவும் ஒரு வீரராகவும் இருந்தார். 1983ஆம் ஆண்டு அப்போது நிலவிய சூழ்நிலை காரணமாக நாங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற நேரிட்டது. எனினும், நான் உண்மையைக் கூற கடமைப்பட்டுள்ளேன். இரண்டு தசாப்தங்கள் எனது தந்தை விடுதலைப் புலிகளின் பொலிஸ் பிரிவில் சேவையாற்றினார் என்பதைக் கூறிக்கொள்கின்றேன். எவ்வாறாயினும், எனது தந்தை இறுதி யுத்தத்தின் போது காணாமல் ஆக்கப்பட்டார்.

என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். நான் உண்மையை பேச வேண்டியிருக்கின்றது. நான் இன்று இங்கிருப்பது நாட்டை பிரிப்பதற்காக அல்ல. நாட்டில் ஒற்றுமையும் சமாதானமும் நிலவ வேண்டும். அதனையே நாங்கள் வேண்டிக்கொள்கின்றோம். நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து, பிரிவினைகளும் இன்றி இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்.

## 13 தொடர்பில்....

என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மாறாக மாகாண சபை முறை எவ்வித கலந்துரையாடல்களுமின்றி ஒழிக்கப்படும் என நான் ஒருபோதும் கூறவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் நடைமுறையில் உள்ள அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள மாகாண சபை முறைமையை முடிவுக்குக் கொண்டு வரவும், புதிய அரசியலமைப்பின் ஊடாக அனைத்து இன மக்களுக்கும் சமமான உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்யவும் தேசிய மக்கள் சக்தி அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என அண்மையில் அவர் தமிழ் ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்டிருந்ததாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த செய்தியில், "தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படுத்துவதாகக் கூறிய இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக 13ஆவது அரசமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை ஆரம்ப காலத்திலிருந்தே நாங்கள் எதிர்த்து வந்துள்ளோம். நாட்டு மக்களின் விருப்பத்துக்கு மாறாகவும் அமைச்சரவையில் கூட அனுமதி பெறாமலுமே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

## டில்லியை..

பேராசிரியர் ஒருவர் ஊடாக பேச்சுகளை நடத்தியுள்ளார். இதன் அடிப்படையில் இந்த நாடுகளுடனான இறுதி ஒப்பந்தத்தில் கையொப்பமிடு வதற்காக தமது முதலாவது வெளிநாட்டு பயணத்தை மேற்கொள்ள அநுர குமார திசாநாயக்க ஆரம்பத்தில் திட்ட மிட்டுள்ளார். என்றாலும், இந்த ஒப்பந்த த்தில் ஏற்பட்டுள்ள தாமதம் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் பின்பற்றிய பாரம்பரியம் காரணமாக அதிலிருந்து பின்வாங்கிய அநுரகுமார திசாநாயக்க, முன்னைய அரச தலைவர்கள் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணத்தின் பாரம்பரியத்தை பின்பற்ற திட்டமிட்டுள்ளார். எவ்வாறாயினும், ஜனாதிபதியின் இந்திய பயணம் மிகவும் தீர்க்கமான ஒன்றாகும். இந்த பயணத்தை சர்வதேச சமூகம் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதே இதற்குக் காரணம்.

இந்த பயணத்தில் ஜனாதிபதி எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை, முன்னாள் ஜனாதிபதி இந்தியாவுடன் ஏற்கனவே கையெழுத்திட்ட ஒப்பந்தங்க ளாகும். குறிப்பாக ரணிலின் ஆட்சிக்காலத் தில் திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் தொடர்பில் இந்தியாவுடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடு, மன்னாரில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிலையத்தை அமைக்க அதானி நிறுவன த்துடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்பாடு, கொழும்பு துறைமுகத்தில் மேற்கு முனையத்தை நிர்மாணிக்கும் பணியை அதானி குழுமத்துக்கு வழங்கியமை, இந்தியா – இலங்கையில் இடையில் நிலத் தொடர்பை ஏற்படுத்துவது உட்பட பல்வேறு உடன்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி அநுர தமது பயணத்தில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் வெற்றியுடன், இந்த ஒப்பந்தங்கள் அனைத்தையும் மீள் பரிசீலனை செய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்திருந்தமையால் இந்தியப் பயணம் தொடர்பில் சர்வதேச நாடுகளும் இலங்கையில் உள்ள இராஜ தந்திரிகளும் உன்னிப்பாக அவதானம் செலுத்தியுள்ளனர்.

இந்திய ஒப்பந்தங்கள் தொடர்பில் ஜனாதிபதி இவ்வாறு கருத்துக்களை தெரிவி த்திருந்தமைக்கான காரணம் அவர் இந்திய பயணத்தை மேற்கொள்வதற்கு முன்னர், இந்தியா தொடர்பான தனது நிலைப்பாட்டை சர்வதேசத்துக்கு வெளிகாட்ட வேண்டிய தேவை இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக் கின்றனர். எவ்வாறாயினும், அவரது பயணத்துக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியாவுக்கு பயணமொன்றை மேற்கொண்டுள்ளார். அவரது இந்த பயணத்தில் இந்திய – இலங்கை உறவு தொடர்பிலும் அநுர அரசாங்கம் தொடர்பிலும் சில கருத்துகளையும் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளார்.

## ஜனாதிபதியின்...

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கடந்த நவம்பர் மாதம் 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தமது கொள்கை விளக்க உரையை நிகழ்த்தியிருந்தார்.

இந்த உரைமீதான விவாதம் நேற்றுமுன்தினமும் (03ஆம் திகதி) நேற்றும் (04ஆம் திகதி இடம்பெற்றது. காலை 9.30 மணி முதல் பி.ப. 5.30 வரை இரண்டு நாட்களும் விவாதம் இடம்பெற்றது. இதில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் தமது கருத்துகளை முன்வைத்திருந்தன.

விவாதம் மீதான வாக்கெடுப்பை எதிர்க்கட்சிகள் கோராமையால் அரசாங்கத்தின் கொள்கை பிரகடனம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் அறிவித்தார்.

## அரசியல் இலஞ்சமாக...

(wine stores) அனுமதிப் பத்திரங்களாகும்.

மேல் மாகாணத்துக்கு 110 மதுபான அனுமதிப் பத்திரங்களும், தென் மாகாணத்துக்கு 48, வடக்கு மாகாணத்துக்கு 32, கிழக்கு மாகாணத்துக்கு 22, மத்திய மாகாணத்துக்கு 45, வடமத்திய மாகாணத்துக்கு 14, வடமேல் மாகாணத்துக்கு 30, ஊவா மாகாணத்துக்கு 30, சப்ரகமுவ மாகாணத்துக்கு 30 என்ற அடிப்படையில் 331 மதுபான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

FL4 எனப்படும் சில்லறை மதுபான அனுமதிப் பத்திரங்கள் 172 அனுமதி பத்திரங்கள் இந்த காலப்பகுதியில் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

## கொள்ளை...

கூறியுள்ளார். இதன்படி, குற்றச் செயல்கள் தொடர்பான சட்டமூலம், மீட்பு, புனர்வாழ்வு மற்றும் வங்குரோத்து சட்டமூலம் மற்றும் கணக்காய்வு சட்டமூலத்திற்கான திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.இங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், "கொள்ளையிடப்பட்ட சொத்துக்களை மீளப்பெறுதல், நிதிமோசடி மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஆகியவற்றை திறம்படத் தடுக்கும் நோக்கில் இந்த சட்டங்கள் கொண்டுவரப்படவுள்ளன.கணக்காய்வு சட்டத்தின் திருத்தங்கள் கடனாளிகளின் நம்பிக்கையை மேம்படுத்துவதுடன் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும்" என அமைச்சர் மேலும் கூறினார்.

## தட்டுப்பாட்டை...

220 ரூபாவிற்கும் தேங்காய் ஒன்றினை 130 ரூபாவிற்கும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான இரண்டாம் நாள் விவாதம் நேற்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இந்த விடயத்தினை கூறியுள்ளார்.

## வடக்கில்..

"இனவாதத்துக்கு நாம் எப்போதும் எதிரானவர்கள். அதேபோன்று நினைவுகூரல்களை நடத்த அனைவருக்கும் உரிமை உண்டு என்பதையும் ஏற்றுக்கொள்கிறோம். சிவாஜிலிங்கம் போன்றோர் வடக்கில் பயங்கரவாதிகளை நினைவுகூர்ந்தனர்.

ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வடக்கில் கைதுகளை செய்ய குற்றவியல் சட்டத்தையும் தெற்கில் உள்ளவர்களைக் கைதுசெய்ய பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் பயன்படுத்துகிறது" என குற்றம் சாட்டினார்.

இதற்கு ஆளும் தரப்பின் சார்பில் பதில் அளித்த பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, "வடக்கில் ஒரு சட்டமும் தெற்கில் ஒரு சட்டமும் பயன்படுத்தப்படுவதாக தயாசிறி ஜயசேகர குற்றம் சுமத்தினார்.

இதுதொடர்பில் நான் பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடினேன். அவ்வாறு இரண்டு சட்டங்களின் பிரகாரம் அல்ல பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தான் இரண்டு பகுதிகளிலும் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

அதனால் தயாசிறி ஜயசேகர மீண்டும் இனவாதத்தைப் பரப்பும் கருத்ததைதான் வெளியிட்டுள்ளார். அவர்களது அரசியல் தோல்வியை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தவே இவ்வாறான உண்மைக்குப் புறம்பான கருத்துகளை சபையில் வெளியிடுகிறார்" என்றார்.

இதன்போது மீண்டும் குறிக்கிட்ட ஜயாசிறி ஜயசேகர எம்.பி,

என் வாழ்நாளில் ஒருநாளும் இனவாதத்துக்கு துணைபோனதில்லை என்றார்.

இதற்கு ஆளும் தரப்பு சார்பில் கருத்து வெளியிட்ட சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க,

"தயாசிறி எம்.பி குற்றச்சாட்டொன்றை முன்வைத்தார். அதற்கு துறைசார் அமைச்சர் உரிய பதிலை வழங்கியுள்ளார். சபை நடவடிக்கைகளை கொண்டுசெல்ல வேண்டும் என்பதால் இதனை விவாதமாக்க சபாநாயகர் இடமளிக்கக் கூடாது. தொடர்ந்து கருத்துக்களை வெளியிட்டால் அமைச்சர் மீண்டும் கருத்து வெளியிட வேண்டியிருக்கும். தயாசிறி எம்.பிக்கு நாடாளுமன்றில் விசேட உரிமைகள் ஏதும் இல்லை என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

நாடாளுமன்றில் எவ்வளவு காலம் இருந்தோம் என்பதல்ல முக்கியம். 24 வயதுடைய எம்.பி ஒருவரும் இங்கு இருக்கிறார். நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் தெரியாமல் தயாசிறி எம். பி பேசுகிறார். நீங்கள் பேசிய கருத்து முற்றிலும் இனவாதமானது. அதனால் சபாநாயகர் இதற்கு இடமளிக்கக் கூடாது" என்றார்.

மீண்டும் குறிக்கிட்ட தயாசிறி எம்.பி,

சபை முதல்வரால் நாடாளுமன்றத்தை கட்டுப்படுத்த முடியாது. சபாநாயகர் தான் நாடாளுமன்றத்தை வழிநடத்த வேண்டும். இனவாதக் கருத்துக்களை நான் வெளியிட்டதாக கூறிய கருத்தை மீளப் பெற வேண்டும்" என்றார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சித் தலைவர்,

நிலையியற் கட்டளை 92 உ, வின் பிரகாரம் எந்தவொரு எம்.பிக்கு எதிராகவும் தனிப்பட்ட தாக்குதல்களை நடத்தக் கூடாது. அது தொடர்பில் ஆளுங்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு தெரியும். அதனால் நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் செயல்படுவோம். அவ்வாறான கருத்துகள் மீள பெறப்பட வேண்டும்" என்றார்.

## அரசியல் கைதிகள்...

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இந்த கோரிக்கையினை முன்வைத்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், "நாட்டில் சமத்துவம் என்பது மிகவும் முக்கியமானது. அதனை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனாலும், ஜனாதிபதி அண்மையில் ஆற்றிய அக்கிராசன உரையில் தமிழ் மக்களுக்கு மட்டும் உரித்தான சில பிரச்சினைகள் பற்றி பேசியிருக்கவில்லை.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரதான கட்சி என்ற அங்கீகாரம் இலங்கை தமிழரசு கட்சிக்கு மீண்டும் கிடைத்துள்ள நிலையில், இந்த விடயங்களை நான் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

அந்த வகையில் பல அரசியல் கைதிகள் இன்னும் விடுவிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஒரு அரசியல் நோக்கத்திற்காக ஆயுதம் ஏந்தி போராடிய இந்த தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்பத்தில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அவர்கள் மீது தற்போது பல்வேறு வழங்கு பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்தவிடயம் தொடர்பில் அரசாங்கம் உடனடி கவனம் செலுத்த வேண்டும்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குவதாக கூறி ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் தற்போது அந்தச் சட்டத்தைக் கையில் எடுத்துள்ளது.

இந்நிலையில், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய அரசாங்கம் கவனமெடுக்க வேண்டும்" என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இலங்கையின் ஏற்றுமதி செயல்திறன் அதிகரிப்பு!



இலங்கையின் பொருட்கள் ஏற்றுமதி அதிகரிப்பானது கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 2024 ஒக்டோபரில் 18.22% ஆக அதிகரித்துள்ளது.

அதன்படி, 2024 ஒக்டோபரில் பொருட்கள் ஏற்றுமதியானது 1,097.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை குறிப்பிட்டுள்ளது.

இலங்கை சுங்கத்தால் வெளியிடப்பட்ட தற்காலிக தரவுகளின்படி,

இது முக்கியமாக ஆடை மற்றும் துணிகள், தேயிலை, இறப்பர் சார்ந்த பொருட்கள், தேங்காய் சார்ந்த பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் மற்றும் செறிவூட்டப்பட்ட பொருட்களின் ஏற்றுமதியின் வருமான அதிகரிப்பு காரணமாகும். 2024 செப்டம்பருடன் ஒப்பிடும்போது 2024 ஒக்டோபரில் ஏற்றுமதி செயல்திறன் 8.44% அதிகரித்துள்ளது என்று ஏற்றுமதி அபிவிருத்தி சபை மேலும் தெரிவித்துள்ளது. 2024 ஒக்டோபர் மாதத்திற்கான சேவைகள் ஏற்றுமதிகளின் மதிப்பிடப்பட்ட மதிப்பு 323.17 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். இது 2023 ஆம் ஆண்டின் தொடர்புடைய காலகட்டத்தை விட 19.75மூ அதிகரித்துள்ளது.

### குற்றச்சாட்டுக்களிலிருந்து

# ஹிருணிகா விடுதலை



நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை நிறைவு செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், அந்தக் குற்றச்சாட்டுக்களிலிருந்து அவரை விடுவிக்க நேற்று (04) உத்தரவிட்டது.

கல்கிஸ்ஸை நீதவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட உத்தரவு தொடர்பில் ஊடகவியலாளர் மாநாட்டில் தான் வெளியிட்ட அறிக்கையை மீளப்பெறுவதாகவும், எதிர்காலத்தில் அவ்வாறான கருத்துக்களை வெளியிடப் போவதில்லையெனவும் ஹிருணிகா பிரேமச்சந்திர தனது சட்டத்தரணி ஊடாக அறிவித்ததை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்த்திகை மாதம் 20ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்** – உங்களைப் பற்றி நன்றாகவும் நம்பிக்கையாகவும் உணர்வீர்கள்.

**ரிஷபம்** – வேலையில் ஏற்படும் அழுத்தம் எரிச்சல் அடையச் செய்யும். சற்று நிதானமாக நடந்துகொள்ளுங்கள்

**மிதுனம்** – பழைய நண்பர் ஒருவர் உங்களுக்கு சில பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.

**கடகம்** – நீங்கள் நண்பர்களுடன் ஒரு விருந்தில் நிறைய பணம் செலவழிக்க வேண்டி ஏற்படும்.

**சிம்மம்** – உங்கள் மனதை அசைத்துப் பார்க்கக் கூடிய ஒருவரை சந்திப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

**கன்னி** – அனைத்து நிதி பரிவர்த்தனைகளிலும் கவனமாக இருங்கள்

**துலாம்** – முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**விருட்சிகம்** – உடல் நோயில் இருந்து மீண்டு வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

**தனுசு** – கணவன் – மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்** – தாமதமான நிலுவைகள் வசூலாகும் என்பதால் பண நிலைமை மேம்படும்.

**கும்பம்** – சில சந்தர்ப்பங்களில் நீங்கள் சராசரியை விட சிறந்த முடிவுகளைப் பெறலாம்.

**மீனம்** – வீட்டை விட்டு விலகி பணம் சம்பாதிப்பவர்கள் நல்ல பலன்களைப் பெறுவீர்கள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** சதுர்த்தி திதி மதியம் 12:24 PM அதன் பிறகு பஞ்சமி திதி.
**நட்சத்திரம்:** உத்திராடம் நட்சத்திரம் மாலை 05:27 PM அதன் பிறகு திருவோணம் நட்சத்திரம்.
**யோகம்:** சித்த யோகம்.
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** மிருகசீரிடம், திருவாதிரை.
**சூலம்:** தெற்கு.
**இராகு காலம்:** மதியம் 01:30 PM முதல் 03:00ீஆ வரை,
**குளிகை:** காலை 09:00 AM முதல் 10:30 AM வரை,
**எமகண்டம்:** காலை 06:00 AM முதல் 07:30 AM வரை,


# இலங்கை வரலாற்றின் மிக மோசமான விமான விபத்து நேற்று 50 வருட நிறைவு

## 181 ஹஜ் பயணிகளின் உயிர்களை காவு கொண்ட அனர்த்தம்

**(முகம்மட் முக்தார்)**

இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய விமான விபத்தாகக் கருதப்படும் மார்ட்டின் எயார் விமான விபத்து நடைபெற்று நேற்றுடன் (04) 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

1974ஆம் ஆண்டு டிசம்பர் 4ஆம் திகதி இந்தோனேசியாவின் சுராபயாவிலிருந்து 182 ஹஜ் பயணிகளை ஏற்றிக்கொண்டு மக்கா நோக்கிச் சென்ற மார்டின் எயார் பயணிகள் விமானம் ஒன்று இரவு 10.10க்கு மஸ்கெலியா நோட்டன் பிரிட்ஜ் தெப்பட்டன் பகுதியில், சப்த கன்னியா என அறியப்படும் ஏழு கன்னியர் மலையின் ஐந்தாவது குன்றின் மீது மோதி வெடித்து சிதறியது. இதன்போது



ஹஜ் யாத்திரிகள், விமானிகள் உள்ளிட்ட 190 பேரும் அதே இடத்தில் பலியாகினர். இதனையடுத்து, விபத்தில் பலியான 190 பேர் தெப்பட்டன் தோட்ட கொத்தலென பகுதியிலேயே அடக்கம் செய்யப்பட்டனர்.

அடையாளம் காணக்கூடியவாறு இருந்த ஒரு விமானப் பணிப் பெண்ணின் உடலை மட்டும் அவரின் காதலர் ஹெலிகொப்டர் மூலமாக இந்தோனேசியாவுக்கு கொண்டு சென்ற நெகிழ்ச்சியான சம்பவமும் இதில் அடங்கும். அத்தோடு, விபத்துக்குள்ளான விமான பாகங்களில் எஞ்சியிருந்த டயர்கள் இரண்டு மட்டும் இதுவரை பாதுகாக்கப்பட்டு வருகின்றது. ஒரு டயர் நோட்டன் பொலிஸ் நிலையத்தில் உள்ளது. நல்ல நிலையிலிருக்கும் டயர் நோட்டன் விமலசுரேந்திர மின்உற்பத்தி நிலையத்திற்கு செல்லும் செல்லும் அணைக்கட்டு வழியில் சம்பவங்களைச் சுருக்கமாகத் தாங்கி பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரூபிக்ஸ் கியூப்களை பயன்படுத்தி ஜனாதிபதி அநுரவின் உருவப்படம்

## 11 வயது சிறுவன் உலக சாதனை



சன்சுல் செஹன்ஷா லக்மால் (**Sansul Sehansha Lakmal**) என்ற 11 வயது சிறுவன் 1,200 ரூபிக்ஸ் கியூப்களை பயன்படுத்தி 91 அங்குல உயரமும் 68 அங்குல அகலமும் கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பாரிய உருவப்படத்தை உருவாக்கி உலக சாதனை படைத்துள்ளார்.

அவர் இந்த சாதனையை 3 மணி நேரம், 13 நிமிடங்கள், 7 வினாடிகளில் செய்து சோழன் உலக சாதனைகளில் இடம் பெற்றார்.

சோழன் புக் ஆஃப் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் (**Cholan Book of World Records**) மற்றும் பீப்பிள்ஸ் ஹெல்பிங் பீப்பிள் ஃ பவுண்டேஷன் (**Peoples Helping People Foundation** ) ஆகியவை இணைந்து நேற்று முன்தினம்(03) இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தன.

பிரிகேடியர் மஹா துவாக்கர் மற்றும் பிரதி கட்டளை அதிகாரி பிரிகேடியர் வாசகே ஆகியோர் முன்னிலையில் கம்பஹா, யக்கலவில் இச்சாதனை நிகழ்த்தப்பட்டது.

அமைப்பாளர்கள் இச்சிறுவனின் சாதனையை அங்கீகரிப்பதற்காக இராணுவ அதிகாரிகளுடன் சேர்ந்து சான்றிதழ், தங்கப் பதக்கம், நினைவுக் கேடயம் ஆகியவற்றை வழங்கி கௌரவித்தனர்.

# பங்களாதேஷ்க்கான பயண தவிர்ப்பு ஆலோசனையை நீடித்தது இங்கிலாந்து

நாடு முழுவதுமான பயங்கரவாதத் தாக்குதல்களின் அபாயத்தை மேற்கோள் காட்டி, பங்களாதேஷ்க்கான பயண ஆலோசனையை ஐக்கிய இராச்சியம் புதுப்பித்துள்ளது.

அதன்படி, வன்முறையால் பாதிக்கப்பட்ட தெற்காசிய தேசத்தில் பயங்கரவாதிகள் தாக்குதல்களை நடத்த வாய்ப்புள்ளதாகவும், அதனால் பங்களாதேஷ்க்கு பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்குமாறும் இங்கிலாந்து தனது குடிமக்களை எச்சரித்துள்ளது. செவ்வாயன்று வெளியிடப்பட்ட புதிய பயண ஆலோசனையில், வெளிநாட்டுப் பிரஜைகள் பார்வையிடும் நெரிசலான பகுதிகள், மத வழிபாட்டுக் கட்டிடங்கள் மற்றும் அரசியல் பேரணிகளை இலக்கு வைத்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்று எச்சரித்துள்ளது.

பயங்கரவாதத் தாக்குதல்களின் சாத்தியக்கூறுகளைத் தவிர, ஆயுதக் கொள்ளை, வன்முறைக் குற்றம் மற்றும் கற்பழிப்பு உள்ளிட்ட பிற சாத்தியமான அச்சுறுத்தல்களுக்கு எதிராகவும் இங்கிலாந்து அரசாங்கம் எச்சரித்துள்ளது.

இஸ்கான் அமைப்பின் முன்னாள் தலைவரான சின்மோய் கிருஷ்ண தாஸ் பிரம்மச்சாரி, தேசத்துரோக குற்றச்சாட்டின் கீழ் நவம்பர் 25 அன்று கைது செய்யப்பட்டார்.

அதன் பின்னர், சிறுபான்மை இந்து சமூகத்திற்கு எதிராக பங்களாதேஷில் வன்முறைகள் அதிகரித்துள்ள நிலையில் ஐக்கிய இராச்சியத்தின் இந்த அறிவுறுத்தல் வந்துள்ளது.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் “தமிழர் செவ்வியல் ஆடல்” 2024

“தமிழர் செவ்வியல் ஆடல்“ நிகழ்வு டிசம்பர் 6,7,8 ஆகிய தினங்களில் காலை, மாலை நிகழ்வாக நடைபெறவுள்ளதாக கொழும்புத் தமிழ்ச் சங்கம் அறிவித்துள்ளது.

நாளை(06) வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் கொழும்புத் தமிழ்ச் சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நிகழ்வு ஆரம்பமாகும்.

பேராசிரியர் சபா. ஜெயராசா “தமிழர் செவ்வியல் ஆடல்: குறுக்கீடுகளும் வளர்ச்சியும்“ என்ற தலைப்பில் உரையாற்றுவார். “தமிழர் செவ்வியல் ஆடல்“ என்ற சிறப்பு மலரின் வெளியீட்டுரையை கொழும்புத் தமிழ்ச் சங்க இலக்கியக்குழுச் செயலாளர் தெ. மதுசூதனன் நிகழ்த்த, முதற்பிரதியை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பெற்று சிறப்பிப்பார்.




இரண்டாம் நாள் நிகழ்வு சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பேராசிரியர் சபா. ஜெயராசா தலைமையில் ஆய்வரங்கு நடைபெறும்.மாலை 4.30 மணிக்கு கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை தலைவர் திருமதி துஸ்யந்தி சத்தியஜித் சிறப்புரையாற்றுவார்.

மூன்றாம் நாள் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பேராசிரியர் சபா. ஜெயராசா தலைமையில் ஆய்வரங்கு ஆரம்பமாகும். மாலை 4.30 மணிக்கு விரிவுரையாளரும், ஆய்வாளருமான முனைவர் சுபாஷணி பத்மநாதன் சிறப்புரையாற்றுவார் என கொழும்புத் தமிழ்ச் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மண்டைதீவு கடல் பகுதியில் 188 கிலோ கேரள கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம் மண்டைதீவு கடல் பகுதியில் 188 கிலோ கேரள கஞ்சாவை கடற்படையினர் நேற்று புதன்கிழமை (04) அதிகாலை கைப்பற்றியுள்ளனர். சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த டிங்கி படகினை சோதனை செய்ய முற்பட்ட போது படகில் இருந்த இரண்டு நபர்கள் தப்பிச் சென்ற நிலையில் 188 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் படகின் உரிமையாளர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கடற்படையின் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## எச்ச சொச்சங்களும் இழுக்கை ஏற்படுத்தலாம்

பத்தாவது நாடாளுமன்றமும் எச்ச சொச்சங்களோடு பாதிக்கப்படுமா? என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட தொடங்கி இருக்கிறது. நாட்டில் System change - முறைமை மாற்றம் ஒன்றை எதிர்பார்த்தே புதிய நாடாளுமன்றத்துக்கு மக்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள்.

செவ்வாய்க்கிழமை ஆரம்பமான நாடாளுமன்ற அமர்வு, முன்னைய நாடாளுமன்றத்தை ஞாபகமூட்டுவதாகவே இருந்தது.

இந்தத் தேர்தலில், புதிய பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஒருவர் மீது எதிர்க்கட்சி உறுப்பினர் தாக்குதல் நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான சுஜித் என்பவரே, நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் உள்ள, எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்துக்குள் வைத்து, தன்னை தாக்கியதாக, சுயேசை எம். பியாக தெரிவு செய்யப்பட்டுள்ள, மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா சபையினுள் முறையிட்டார்.

அந்த வேளையில், சபைக்கு தலைமை தாங்கிக் கொண்டிருந்த, குழுக்களின் பிரதித் தலைவர், சபாநாயகரிடம் முறையிடுமாறு கூறிவிட்டு சபையின் விடயதானங்களுக்குள் சென்று விட்டார்.

இதேவேளை, தான் யாரையும் தாக்கவில்லை என்று சுஜித் எம்.பியும் சபையினுள் மறுத்துரைத்தார்.

புதிய முகங்களோடும், புதிய சிந்தனையோடும் பத்தாவது நாடாளுமன்றம் மிடுக்கோடு செயல்படப் போகின்றது என்ற எதிர்பார்ப்போடு இருந்த மக்களின் நம்பிக்கையில் கரும்புள்ளி ஒன்று ஏற்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவரின் நாடாளுமன்ற அலுவலகத்துக்குள் வைத்து தன்னை தாக்கியதாக மருத்துவர் அர்ச்சுனா பகிரங்கமாக கூறுகிறார். பூட்டிய அறைக்குள் நடந்திருக்கின்ற சமாச்சாரம் இது. அந்த அறையினுள் இருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களுக்குத் தான் உண்மை என்ன என்பது தெரியும்.

இந்த உண்மைத் தன்மை அக்குவேறு ஆணிவேறாக விசாரிக்கப்பட வேண்டும்.அதாவது, பாரபட்சமில்லாமல் துருவித்தேடி, உண்மையை கண்டறிய வேண்டும். இதில் மாற்று கருத்துக்கள் இருக்க வாய்ப்பில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, பல்வேறு சர்ச்சைகளை உருவாக்கியவர்.சமூகவலைத்தளங்களில்,பேசுபொருளாகஇருப்பவர். தன்னுடைய வாழ்வியலையும் அரசியல் வாதங்களையும் பேசி, சர்ச்சைக்குரியவராக உலக அரங்கில் பேசப்படுபவர். நாடாளுமன்ற கன்னி அமர்வின் போது, எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தில் இருந்து வேறு ஆசனத்துக்கு செல்ல மறுப்பு தெரிவித்ததனால், ஒரு குழப்பகாரராக தன்னை நிரூபித்தவர்.

இப்படி பெயர் வாங்கிய ஒருவர், இன்னும் ஒரு சக நாடாளுமன்ற உறுப்பினரினால் தாக்கப்பட்டாரென்று கூறியதை, யாரும் பெரிதாக அலட்டிக் கொண்டதாக தெரியவில்லை. இது அவருடைய வழமையான பாணி என்றே பலரும் நினைத்துக் கொண்டார்கள் போல் தெரிகிறது. சபாநாயகரின் தீர்ப்பு, அறிவிக்கப்பட்டதன் பின்னர் தான், நடந்த உண்மை நிலையை அறிய முடியும்.

இது ஒரு புறம் இருக்க, ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதம் நடந்து கொண்டிருக்கையிலும் கூட, முன்னைய அரசாங்கங்களின் போது நடந்த அலங்கோலங்களை ஞாபகப்படுத்துவதாக இருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான, 52 நாள் அரசாங்கத்தின் போது. நாடாளுமன்றத்தில் நடந்த சம்பவங்கள், வரலாற்று கறையாக இன்றும் இருந்து கொண்டிருக்கிறது.. அடிதடி.... கத்திக்குத்து முயற்சி.. சபா மண்டபத்தினுள் மிளகாய் தூள் வீச்சு... சபாநாயகரின் ஆசனம் சுக்குநூறாக உடைக்கப்பட்டமை, மக்கள் மன்றத்தின் சபாநாயகர் ஒருவர் உள் நுழைவதற்கு அனுமதியாத நிலையில் பொலிஸாரோடு வருகை தந்தமை, சபா மண்டபத்தினுள் பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டமை இவையெல்லாம் கற்பனைச் சம்பவங்கள் அல்ல.

மேற்கண்டவையெல்லாம் முன்னைய ஆட்சியின் போது இந்த நாடாளுமன்ற சபா மண்டபத்துக்குள் நடந்தவை என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். இந்த சம்பவங்கள் தொடர்பாக, இதுவரை விசாரணைகள் நடத்தப்படவில்லை. இந்த விடயத்தை பல தடவைகள் நாங்கள் சுட்டிக் காட்டி இருக்கிறோம். சிறப்பு உரிமைகளை வைத்துக்கொண்டு, மக்கள் மன்றத்தை கசாப்புக் கடைகள் போன்று நடத்தலாம் என்ற வீராப்புத்தனம், நாட்டையும் மக்களையும் பேரழிவுக்குள் இட்டுச் சென்றது. படித்தவர்களும் பண்பாளர்களும் இந்த உயரிய சபையினுள் இருக்க வேண்டும் என்ற ஆதங்கம் இங்கே பிரதிபலித்தது.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில், முழுமையான மாற்றம் தேவை என்பதை மக்கள் பொதுத் தேர்தல் மூலம் தெளிவுபடுத்தி விட்டார்கள். மக்கள் எதிர்பார்த்த இந்த மாற்றம், நாடாளுமன்றத்தில் இன்னும் ஏற்படவில்லை என்பதை செவ்வாயன்று நடந்த சம்பவம் தெட்டத் தெளிவாக்கி இருக்கிறது.

ஒருவரை தாக்குவதற்கான உரிமையும் அனுமதியும் யாருக்கும் இல்லை. அவ்வாறு, தாக்குதல் நடத்தியதாக ஒரு மக்கள் பிரதிநிதி, சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தால், சபை அதனை மிகக் கவனமாகவும் நுணுக்கமாகவும் கையாள வேண்டும். நாடாளுமன்ற நிலையியல் கட்டளையை காரணம் காட்டி, இவற்றை கட்டுப்படுத்த முற்படுவது பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தலாம். இது அர்ச்சுனா சம்பந்தப்பட்ட விடயமாக இருந்தாலும் சரி, வேறு யாருடைய பிரச்சினையாக இருந்தாலும், அது குறித்து சபா மண்டபம், கவனத்தில் எடுத்து செயல்படுவது உசிதமாக இருக்கும்.

ஒன்றை மட்டும் அழுத்திக்கூற விரும்புகின்றோம். அது இனவாதத்தை முற்றாக நிராகரித்து ஆட்சி பீடம் ஏறிய இந்த அரசு இத்தகைய விடயங்களில் பாரபட்சமில்லாத விசாரணையை நடத்தி, மக்கள் மன்றத்தின் கௌரவத்தை பாதுகாக்க வேண்டும் என்பதேயாகும்.



# பெண் பிரதிநிதித்துவம் உள்ளிட்ட ஆளுமைச் செயற்பாட்டில் அமைச்சர் சரோஜா

கனுஷியா புஷ்பகுமார்

Highlights - இக் காரண - காரிய அடிப்படையிலேயே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நாடாளுமன்ற அமர்வுகள் மற்றும் அரசியல் - பொருளாதார திட்டங்கள் அனைத்தையும் சர்வதேசம் உண்ணிப்பாக அவதானித்து வருகிறது.

புதிய அரசாங்கத்தின் நாடாளுமன்ற அமர்வுகள் நேற்று முன்தினம் (03) செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து நாளை (06) வரை இடம்பெறவுள்ளன.

நாடாளுமன்றத்திற்கு மிகவும் புதிதான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அரசியல் நகர்வுகள் தொடர்பில் உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் அவதானிக்கப்பட்டு வருகின்றன.

ஏனெனில் இடதுசாரி கொள்கை என்றும் மாக்சிய சிந்தனை கொண்ட கட்சி என்றும் அடையாளப்படுத்தப்பட்ட ஜேவிபியின் முகத் தோற்றமாகவே தேசிய மக்கள் சக்தியின் சமகால அரசியல் - பொருளாதார வகிபாகம் காணப்படுகின்றது.

அதுவும் ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க ஜேவிபியின் தலைவராக இருந்தவர். அவர் தலைவராக இருந்தபோது 2009 ஆம் ஆண்டு போர் இல்லாதொழிக்கப்பட்டது. அதாவது ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டம் ஆயுத வழியில் அடக்கப்பட்டது. இதன் பிரதான காரண - காரியமாக ஜேவிபி செயற்பட்டிருந்தது.

இப் பின்னணியில்தான் அநுரகுமார ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று இலங்கைத்தீவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்றிருக்கிறார்.

இக் காரண - காரிய அடிப்படையிலேயே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நாடாளுமன்ற அமர்வுகள் மற்றும் அரசியல் - பொருளாதார திட்டங்கள் அனைத்தையும் சர்வதேசம் உண்ணிப்பாக அவதானித்து வருகிறது.







அதன்படி, நேற்று முன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது பல இடங்களில் புதுமுகங்கள் என்பது வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும், சில சிறப்பான விடயங்களும் பதிவாகியிருந்தன.

இம்முறை புதிய நாடாளுமன்ற உறுப்பினராக தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுப் பதவியை வகிக்கும் சரோஜா சாவித்ரி போல்ராஜ் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சரளமாக நாடாளுமன்றத்தில் உரையாற்றியமை தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது.

அதாவது மொழிப் புலமை முக்கியமான அவதானிப்பாகும்.

கற்றலில் தேர்ந்தவர்களுடன் நிரம்பியுள்ள 10ஆவது நாடாளுமன்றத்தில், இந்த தருணம் சிறப்பாகப் பார்க்கப்பட்டு வருகிறது. குறிப்பாக சந்திரிகா 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகவும் பின்னர் அரசாங்கத்தையும் கைப்பற்றியது போன்ற உணர்வுகள் மேலோங்கியுள்ளன.

பெண் பிரதிநிதித்துவம் அதிகளவில் காணப்படும் அநுரவின் நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான முன்னுரிமையை மேலும் அதிகரித்துள்ளது.

கொள்கைவாத அரசியல் இலங்கையில் நிலை நாட்டப்பட்டதை நினைத்து பெருமைக்கொள்வதாக சரோஜா சாவித்திரி போல் ராஜ் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது சுட்டிக்காட்டினார்.

மேலும் அவரது உரையில்,

உடல் உள ரீதியாக , பாலியல் ரீதியாக மட்டுமல்லாமல் வாய்மொழி ரீதியாகவும் வன்முறைகளுக்கும் , துஷ்பிரயோகங்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றோம். அதேபோன்று இவ்வாறான அரசியல் களங்களில் கூட தங்களுடைய கருத்துக்களை வெளியிட முடியாத சூழ்நிலை அமையுமாக இருந்தால் இதனை ஒரு ஜனநாயக நாடு என நாங்கள் நினைக்க முடியாது.

ஜனநாயக உரிமை மற்றும் சமத்துவ உரிமை என்பது ஆண், பெண் சமத்துவம் போன்றவற்றையும் சரிசமமாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

அதனை உறுதி செய்கின்ற நாட்டை நாங்கள் உருவாக்குவோம்.


மகளிர் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான சட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும்" என கூறியிருந்தார்.



நாடாளுமன்ற உறுப்பினராக மாத்திரமன்றி புதிய அமைச்சரவை அமைச்சராகவும் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் முக்கியத்துவம் வழங்கி, இரு இனங்களுக்கிடையில் மிகப்பெரிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதில் முன்னோடியாகப் பணியாற்றுவார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் மத்திய கிழக்கு வீட்டுப்பணி பெண்கள், தோட்டத் தொழிலில் ஈடுபடும் பெண்கள் மற்றும் ஆடைத் தொழிலில் ஈடுபடும் பெண்கள் தொடர்பாகவும் அமைச்சர் தனது உரையில் விசேட அவதானம் செலுத்தியிருந்தார்.

பெண்கள் நிலைமை தொடர்பாகவும் நாடாளுமன்றத்தில் பெண் பிரதிநிதித்துவம் பற்றியும் அவ்வப்போது பேசப்பட்டு வந்தாலும் சரோஜா சாவித்திரி போல்ராஜ் மேலதிகமாகவும் துரிதமாகவும் எடுக்கப் போகும் நடவடிக்கைகள் பற்றி எல்லோரும் அவதானம் செலுத்துகின்றனர்.



# இறக்குமதி செய்யாவிட்டால் அரிசி தட்டுப்பாடு ஏற்படலாம்

அரசாங்கம் குறுகிய கால தீர்வாக வெளிநாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்யாவிட்டால், சந்தையில் அரிசிக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படலாமென அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், அரிசிக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் என அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில், அரிசிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீண்டகால வேலைத்திட்டத்தை தயாரிப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என அதன் தலைவர் யு. கே. சேமசிங்க குறிப்பிட்டார்.

“நாம் நீண்ட கால தீர்விற்கு செல்ல வேண்டும், இல்லை என்றால், மீண்டும் மீண்டும் இந்த நெருக்கடிக்கு முகம்கொடுக்கும் சிறு போகத்தில் நெல் கொள்முதல் செய்ய, நெல் சந்தைப்படுத்தல் சபை இந்த நெருக்கடியை தீர்க்க முறையான திட்டத்தை தயாரிக்க வேண்டும்.

பீர் மற்றும் கால்நடை தீவன உற்பத்திக்கான அரிசியை வழங்கும் போது அதனை ஒழுங்குபடுத்துவது மிகவும் முக்கியமானது. இதனிடையே, வெள்ளத்தால் சேதமடைந்த நெற்பயிர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்குப் பதிலாக மீண்டும் பயிரிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் விவசாய பணிப்பாளர் கே. பி. குணரத்ன தெரிவித்துள்ளார்.



## வெல்ஹென்கொடவில் தம்பதிகள் கழுத்தறுத்துப் படுகொலை

அஹங்கம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெல்ஹென்கொட பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் தம்பதிகள் கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைகள் கடந்த ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதி இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர், குறித்த சந்தேக நபர் செவ்வாய்க்கிழமை (03) காலி கோட்டை பகுதியில் வைத்து அஹங்கம பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உனவட்டுன பிரதேசத்தை சேர்ந்த 41 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அஹங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கார் ரயிலில் மோதி விபத்து நால்வர் வைத்தியசாலையில்

ரயில் கடவையை கடக்க முற்பட்ட கார் ரயிலில் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது இடம்பெற்ற விபத்தில் 4 பேர் படுகாயமடைந்து காலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் (03) இரவு இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலி சுதர்மாராம விகாரைக்கு அருகில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த நால்வரில் இரண்டு சிறுவர்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலியில் இருந்து மாத்தறை நோக்கி பயணித்த ரயிலுடன் கார் மோதியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## அநுராதபுரத்தில் பழச் செய்கையை ஊக்குவிக்க பாரிய நடவடிக்கை



(அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப்)

அநுராதபுரம் மாவட்டத்தில் விளைச்சல் குறைந்த நிலங்களில் பாரிய அளவிலான பழச் செய்கையை ஊக்குவித்தல் மற்றும் நீர்ப்பாசன முறைகளை மேம்படுத்துவதன் மூலம் விவசாயிகள் நேரடியாக பயணிப்பதே ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டத்தின் நோக்கமாகுமென அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ரஞ்சித் விமலசூரிய தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டத்தின் (MWSIP) ஊடாக இலங்கையின் வர்த்தக விவசாய அபிவிருத்தியை ஊக்குவிக்க ஒன்றிணைந்துள்ளது.

இந்த முறையில் ஒரு கேந்திர மையமாக வடமத்திய மாகாண கால்வாய் திட்டமாகும். இது பிராந்தியத்தில் விவசாயத்திற்கான நீரோட்டத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ரஞ்சித் விமலசூரிய தலைமையில் அநுராதபுரத்தில் நடைபெற்றது. இச்செயல்திட்டம் மாவட்டம் முழுவதிலும் பரந்தளவில் ஏற்றுமதிக்கு, பழச் செய்கை மேற்கொள்வது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இலங்கையில் பழ உற்பத்தியை விரிபடுத்துவதற்கான வாய்ப்புகள் மற்றும் சந்தர்ப்பங்கள் குறித்து இந்த செயலமர்வில் கலந்துரையாடப் பட்டது. இதற்கமைய ஏற்றுமதிக்கான அடையாளம் காணப்பட்ட முக்கிய பழங்களில் மாம்பழம் , மாதுளை , கொய்யா மற்றும் அன்னாசி பழங்களுக்கு உலகளாவிய தேவை உள்ளன. அத்துடன் உற்பத்தி நிலையங்களை மேம்படுத்தி சீரான விநியோகத்தை உறுதி செய்து ஆண்டு முழுவதும் இலாபத்தைப் பேணுவதற்கான சவாலை எதிர்கொள்ள வேண்டியதன் அவசியம் தொடர்பில் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

## மதுபான விற்பனை கசினோ விடுதி சுற்றிவளைப்பு

கொள்ளுப்பிட்டியில் சட்டவிரோதமான முறையில் மதுபான விற்பனையை முன்னெடுத்து வந்த பிரபல கசினோ விடுதியொன்று மதுவரித் திணைக்கள அதிகாரிகளினால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுங்கவரியில்லா 100 வெளிநாட்டு மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டதோடு, அவற்றின் மொத்த பெறுமதி 25 இலட்சம் ரூபாவுக்கு அதிகம் என தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து மாடிகளைக் கொண்ட விடுதியில் ஒவ்வொரு தளத்திற்கும் வருகை தரும் உறுப்பினர்களுக்கு இலவச மதுபானம் வழங்கப்படுகின்றன.

எவ்வாறாயினும், அந்தந்த இடத்திற்கு வழங்கப்பட்ட மதுபான உரிமத்தின் மூலம் ஒரு மதுபானக் கூடத்தை மாத்திரமே இயக்க முடியும் என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நாட்டுக்கு பாரிய வரி இழப்பு ஏற்படும் என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## பூசா சிறைச்சாலை வைத்தியசாலையில் கையடக்கபேசி கண்டுபிடிப்பு

பூசா சிறைச்சாலை வைத்தியசாலை வளாகத்திலும் சிறைச்சாலை வளாகத்திலும் ஏராளமான கையடக்க தொலைபேசி உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படை பூசா உயர்பாதுகாப்பு சிறைச்சாலை முகாமின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் சிறைச்சாலை வைத்தியசாலை மைதானத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த உபகரணத் தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறைச்சாலை வைத்தியசாலை மற்றும் சிறைச்சாலையில் 5 கையடக்கத் தொலைபேசி சார்ஜர்களும் 8 டேட்டா கேபிள்களும் காணப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது.

கண்டுபிடிக்கப்பட்ட தொலைபேசி பாகங்கள் மேலதிக விசாரணைகளுக்காக சிறைச்சாலை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

## கடவுச்சீட்டுகள் கொள்வனவு விசாரணைகள் முன்னெடுப்பு




கடந்த அரசாங்கத்தின் போது குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு 05 மில்லியன் இலத்திரனியல் கடவுச்சீட்டு கொள்வனவுக்கான விலைமனு வழங்கப்பட்ட விதம் தொடர்பில் தேசிய கொள்முதல் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சட்ட மா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

வெளிநாட்டு கடவுச்சீட்டுக் கொள்வனவு தொடர்பான விலைமனு வழங்கப்பட்ட விதத்தை சவாலுக்குட்படுத்தி எபிக் லங்கா பிரைவேட் நிறுவனம் தாக்கல் செய்த மனு நேற்றுமுன்தினம் சீராக்கல் மனு ஊடாக அழைக்கப்பட்ட போதே சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன இந்த அறிவித்தலை வழங்கினார்.

இந்த மனு முகமது லபார் தாஹிர் மற்றும் பி. குமாரன் ரத்னம் ஆகிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இதன்போது, ஐந்து மில்லியன் இலத்திரனியல் கடவுச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்கான விலைமனு வழங்கப்பட்ட விதம் தொடர்பில் தேசிய கொள்முதல் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணை தொடர்பான கண்காணிப்புகளை சமர்ப்பிக்க அந்த குழு ஒரு வார கால அவகாசம் கேட்டுள்ளதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

இதன்படி, இந்த நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை அறிவிக்க திகதி ஒன்றை பெற்றுத்தருமாறு அவர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது, குறித்த கடவுச்சீட்டுகளை கொள்வனவு செய்வதைத் தடுத்து நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவை நீக்குமாறு தமது வாடிக்கையாளர்கள் விடுத்துள்ள கோரிக்கையை பரிசீலிக்க திகதி ஒன்றை பெற்றுத்தருமாறு பிரதிவாதி நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்திய ஜனாதிபதி சட்டத்தரணி கே. கனகேஸ்வரன் தெரிவித்தார்.

அதன்படி, இது தொடர்பான விசாரணையை ஜனவரி 23 ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

## கடந்த 14 வருடங்களில் 4194 யானைகள் உயிரிழப்பு

(அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப் )



கடந்த 14 வருடங்களில் மனித செயற்பாடுகள் உட்பட பல்வேறு காரணங்களால் கிட்டத்தட்ட 4194 யானைகள் உயிரிழந்துள்ளதாக யானை ஆய்வாளர் சமீர விதுரங்க தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டில் மட்டும் மனித நடவடிக்கைகளாலும் மிகக் குறைவான நோய்களாலும் கிட்டத்தட்ட 470 யானைகள் உத்தியோகபூர்வமாக இறந்திருக்கும் என அவர் சுட்டிக்காட்டினார்.

பெரும்பாலான யானைகள் சட்டவிரோத மின்கம்பிகள்,வாய் வெடில் உணவுவகைகளை உட்கொள்ளல் மற்றும் துப்பாக்கிச்சூடு போன்றவைகள் மூலம் கொல்லப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டு இது வரைக்கும் 200 கும் மேற்பட்ட காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதுடன். இந்த மரணங்கள் அனைத்தும் மனிதர்களின் செயற்பாடுகளினால் ஏற்பட்டுள்ளதுடன். தேசிய வனப்பகுதியில் போதுமான அளவு உணவுகள் இல்லாமையால் அந்த மிருகங்கள் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு வருவது சகஜம் எனவும் அவர் தெரிவித்தார்.

## சௌகரியங்களை தெரிவிக்க முறைப்பாட்டு இலக்கங்கள்

யாழ். பலாலி சர்வதேச விமான நிலையத்தில் பயணிகளுக்கு ஏற்படும் சௌகரியங்களை தெரிவிப்பதற்காக புதிய தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன

அதிகாரிகளால் ஏதாவது அசௌகரியங்களை எதிர்கொண்டால் , 0774653915 என்ற இலக்கத்துக்கு அழைத்து விமான நிலையத்தின் செயற்பாட்டு முகாமையாளர் அமரதுங்க என்பவரை தொடர்புகொள்ள முடியும் எனவும்

அத்தோடு 021 221 9373“ என்ற இலக்கத்துக்கு அழைத்து வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திலும் முறைப்பாட்டை பதிவு செய்ய முடியும்.

மேற்குறிப்பிட்ட தொலைபேசி இலக்கங்களை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிமுகப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# தென்கொரியாவின் அவசரகால பிரகடனம்

## பதவி விலக்கப்படும் அபாயத்தில் ஜனாதிபதி யூன் சாக் ஜோல்



தாமோதரம் சுதாகரன்









தென் கொரியாவில் இராணுவ ஆட்சி பிரகடனத்தை அந்நாடு ஜனாதிபதி யூன் சாக் யோல் அறிவித்தார். அங்கு கடந்த 1979ஆம் ஆண்டு ராணுவ ஆட்சி அமுல்படுத்தப்பட்டது. அதற்குப் பின்னர் தென் கொரியாவில் இராணுவ ஆட்சி அறிவிக்கப்பட்டது இதுவே முதல் முறையாகும். ஆயினும் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பை ஏற்க மறுத்த அந்நாட்டு எதிக்கட்சியினர் நாடாளுமன்ற கட்டடம் அருகே மக்கள் போராட்டம் நடத்தினர்.

வடகொரிய ஆதரவாளர்களை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வும் அரசியல் சாசன அமைப்பை காப்பாற்றவே இது செய்யப்பட்டதாகவும் தனது தொலைக்காட்சி உரையில் யூன் சாக் யோல் கூறியிருந்தார். இந்நிலையிலேயே நாடாளுமன்றத்தில் இராணுவம் குவிக்கப்பட்டதுடன், நாடாளுமன்றத்திற்குள் எகிறி குதிக்கவும் எம்பிக்கள் தயாராகினர். நாடு முழுக்க நேற்று முன்தின் இரவு முழுவதும் உச்ச கட்ட பதற்ற நிலை உருவானதுடன் போதாக்குறைக்கு தென்கொரியாவில் ஏற்பட்டு வரும் நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் பிரச்சினையை சுமூகமாகவும் சட்டம் என்ன சொல்கிறதோ? அதற்கு உட்பட்டு தீர்க்க வேண்டும் எனவும் அமெரிக்கா, அறிவித்தது.

### திக் திக் நிமிடங்கள்

அத்துடன் உள்நாட்டில் கிளம்பிய கடுமையான எதிர்ப்பும் ஜனாதிபதி யூன் யோலின் நடவடிக்கையை காரணம் காட்டியும் எதிர்க்கட்சிகள் புதிய பிரச்சனையை கையில் எடுக்கத் திட்டமிட்டுள்ளதுடன் அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் எனவும் குரல் எழுப்பி வருகின்றன. அத்துடன் அவர் பதவி விலகும் வரை காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக பல்வேறு தொழிலாளர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

> அவசர நிலையை திருப்பிப்பெற வேண்டும் என்று தேசிய சபையில் கோரிக்கை வைக்கப்பட்டது. “ தேசிய சபையின் இந்த கோரிக்கையை ஏற்று அவசர நிலையை மீளப்பெறுகின்றோம்.

இந்நிலையில் அவசரகால சட்ட விதிகளின் கீழ், அரசியல் மற்றும் நாளுமன்ற நடவடிக்கைகள் நிறுத்தப்படலாம் அத்துடன் முன்னறிவித்தல் இன்றி கைது நடவடிக்கைகள் இடம்பெறலாம். என தெரிவித்து எதிர்க்கட்சிகள் இதனை கடுமையாக கண்டித்து, மக்கள் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தன. பலர் இந்த நடவடிக்கையை அரசியலமைப்பிற்கு எதிரானது மற்றும் ஜனநாயக நெறிமுறைகள் மீதான தாக்குதல் என்று குற்றம்சாட்டினர்.

அதுமாத்திரமன்றி இரவு நேரத்தில், யூன் யோல் இராணுவச் சட்டத்தை அறிவித்த சிறிது நேரத்தில், சியோலில் உள்ள நாடாளுமன்றக் கட்டிடத்தை பாதுகாப்புப் படைகள் பூட்டிவைத்தனர். அத்தோடு உலங்கு வானூர்திகள் கூரையில் தரையிறங்கின. ஜன்னல்கள் உடைக்கப்பட்டு அதன் வழியாக இராணுவ வீரர்கள் உள்ளே நுழைந்தனர்.

மேலும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த எம்பிக்கள் உள்ளே நுழைவதைத் தடுக்கும் வகையில் இராணுவ வீரர்கள் குவிக்க ப்பட்டனர். தென்கொரிய ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியான உடனேயே சியோலில் உள்ள நாடாளுமன்றத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன. ஆர்ப்பாட்டக்காரர்கள் பாதுகாப்புப் படையினருடன் மோதலில் ஈடுபட்டதுடன் அவசர இராணுவச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்றும், யூன் சுக் இயோலை கைது செய்ய வேண்டும் என்றும் கோஷ ங்களை எழுந்தன.

அதுமாத்திரமணற்றி ஜனாதிபதி யூன் இராணுவச் சட்டத்தை பிரகடனப்படுத்திய பின்னர் தென் கொரியாவில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து அமெரிக்க துணை வெளிவிவகார அமைச்சர் கர்ட் காம்ப்பெல் அதிருப்தியை வெளிப்படுத்தினார். அரசியல் தகராறுகளை அமைதியான முறையில் தீர்த்து சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

மேலும் தென் கொரியாவின் பிரதான எதிர்க்கட்சி, யூன் பதவி விலக வேண்டும் என்று கோரியுள்ளது. நாட்டின் முக்கிய தொழிற்சங்கக் குழு, யூன் ராஜினாமா செய்யும் வரை காலவரையற்ற பொது வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தது.

இதன் காரணமாக வேறு வழியின்றி அவசரகால நிலையை அறிவித்து 6 மணி நேரத்திற்குள் அந்நாட்டு ஜனாதிபதி தனது முடிவை மாற்றவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். தென்கொரிய நேரப்படி அதிகாலை 4.30 மணிக்கு தொலைக்காட்சியில் உரையாற்றிய ஜனாதிபதி யூன் சில மணி நேரத்திற்கு முன்பாக அவசர நிலையை திருப்பிப்பெற வேண்டும் என்று தேசிய சபையில் கோரிக்கை வைக்கப்பட்டது. “ தேசிய சபையின் இந்த கோரிக்கையை ஏற்று அவசர நிலையை மீளப்பெறுகின்றோம். இந்த முடிவானது அமைச்சரவை கூட்டம் வாயிலாக எடுக்கப்பட்டது ” என்றார்.

### அவசரகாலநிலை கட்டுப்பாடுகள்

இந்த அவசரநிலை பிரகடனம் நீடித்து இருந்தால் தென்கொரியாவில் என்ன விதிக்கப்பட்டு விதிக்கப்பட்டிருக்கும்.

அதாவது கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான தென்கொரியவில் தேசிய அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை இரவோடு இரவாக தொலைக்காட்சியில் தோன்றி தென்கொரிய ஜனாதிபதி யூன் சாக் யோல் அறிவித்துள்ளார். இதன் மூலம் ஜனநாயக நாடான தென்கொரியாவில் கடந்த 50 ஆண்டுகளில் முதல் முறையாக அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. இதன் காரணமாக தென்கொரியா எங்கும் ஒரே பரபரப்பாக மாறியதுடன் நாடாளுமன்றத்தை சுற்றிலும் பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டனர். அத்துடன் 190 உறுப்பினர்கள் தேசிய சட்டமன்றத்திற்குள் நுழைய முடிந்ததுடன், யூனின் பிரகடனத்தை நிராகரிக்க ஒருமனதாக வாக்களித்தனர். மேலும் இராணுவச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்தனர்.

தென்கொரிய நடாளுமன்றத்தில் அவரது கட்சி பெரும்பான்மையை இழந்தது. எதிர்கட்சிகளின் தொடர் நெருக்கடியை சமாளிக்க முடியாமல் ஆளும் கடசி தடுமாறியது. இத்தகைய சூழலுக்கு மத்தியிலேயே அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. ஆனால் கடுமையான எதிர்ப்பால் அவசர நிலையை திரும்ப பெறுவதாக தென்கொரிய ஜனாதிபதி அறிவித்தார்.

ஒருவேளை அவசர நிலை பிரகடனத்தால் நீடித்து இருந்தால் அங்கு என்ன நடக்கும்? என்ன மாதிரியான கட்டுப்பாடுகள் இருக்கும் .

### என்னென்ன மாற்றம் ஏற்படும்

அதாவது:

* அரசியல் நடவடிக்கைகள் அனைத்தும் முடக்கப்படும். நாடாளுமன்றம், உள்ளூர் கவுன்சில்கள், அரசியல் கட்சிகள், பேரணிகள், போராட்டங்கள் என அனைத்தும் தடை செய்யப்படும்.

* ஊடகங்கள் அரிசி முழு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படும். அச்சு, வானொலி, தொலைக்காட்சி, இணையதளம், சமூக வலைத்தளங்கள் என அனைத்தும் தீவிர தணிக்கை செய்யப்பட்டிருக்கும்.

* தென்கொரியாவில் இந்த சட்டம் அமுலில் இருக்கும் வரை எந்த ஒரு போராட்டத்தையும் முன்னெடுக்க முடியாது. வன்முறை பதற்றத்தை தூ ண்டும் வகையில் பேசக்கூடாது.

* மருத்துவர்கள், தாதிகள் என அனைத்து மருத்துவ பணியாளர்களும் அடுத்த 48 மணி நேரத்திற்குள் சமூக மருத்துவ பணிக்கு திரும்ப வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகரிகள் உத்தரவை ஏற்று முழுமையாக பணியாற்ற வேண்டும். கடமையை செய்ய தவறினால் அவசர சட்ட விதிகளின் படி கடும் நடவடிக்கை எடுக்கபட்டிருக்கும்.

* அவசர நிலை பிரகடனத்தால் பொதுமக்களின் அன்றாட வாழ்விலும் சற்று சிரமமான சூழல் ஏற்பட வாய்ப்பாக அமைந்திருக்கும். ஏனெனில் அரசாங்கத்தின் உத்தரவை மீறினால் உடனடியாக கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்படுவார்கள்.

மேற்படி அறிவிப்புக்கு ஒரு கண்துடைப்பாக இருந்தாலும் இந்த ஆண்டின் ஆரம்பம் முதல் தற்போதைய ஜனாதிபதி யூன் சாக் யோலின் கட்சி நடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்த நிலையில், எதிர்கட்சிகளின் தொடர் தீர்மானங்களுக்கு எதிராக தற்போதுவரை போராடி வருவதே உண்மையாகு.

எனவே குறித்த அரசியல் தாக்குதல்களைத் தடுக்கும் ஜனநாயக விரோத யுக்தியாக, இராணுவ ஆட்சியை அறிவிக்கும் நிலைக்கு அவர் இப்போது தள்ளப்பட்டுள்ளார் என்று அரசியல் நோக்குநர்கள் கூறுகின்றனர்.

ஏனெனில் அவரச காலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் செயல்பட முடியாது எனக் கருதப்படும் போது, ராணுவ சட்டத்தின் கீழ் தற்காலிக ராணுவ ஆட்சி அமைக்கப்படும்.

தென் கொரியாவில் இதற்கு முன்பாக கடந்த 1979 ஆம் ஆண்டு அவசர நிலை பிறப்பிக்கப்பட்டது. சுமார் 20 ஆண்டுகால ஜனாதிபதி ஆட்சி கவிழ்ப்பின்போது அவர் படுகொலை செய்யப்பட்டார்.

அப்போது அங்கு இராணுவ ஆட்சியே அறிவிக்கப்பட்டு. அதன் பின்னர் 1987 இல் தென்கொரியா நாடாளுமன்ற ஜனநயகமாக மாறியது. அது இடம்பெற்று சுமார் 40ஆண்டுகளின் பின்னர் தற்போது முதல் முறையாக அவசர நிலை அறிவிக்கப்பட்டு பின்னர் 6 மணி நேரத்தில் திரும்ப பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், தென் கொரிய ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்யும் தீர்மானத்தை அந்நாட்டின் எதிர்க்கட்சிகள் நாடாளுமனம் மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது. தென் கொரியாவின் ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்ய நாடாளுமன்றத்தில் 3இல் இரண்டு பெரும்பான்மை ஆதரவும், குறைந்தபட்ச 6 அரசியலமைப்பு நீதிமன்ற நீதிபதிகளின் ஆதரவும் தேவைப்படும் .

இவ்வாறான சூழ்நிலைகள் தனக்கு ஏற்படும் என ஆரம்பம் முதலே கணித்ததனாலோ என்னவோ, அவ்வாறு தலைவலியாக இருக்கும் எதிர்க்கட்சியினரை கட்டுப்பாத்தவும் நாட்டை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவும் இராணுவ ஆட்சியை ஏற்படுதுவதே ஒரே ஒரு தீர்வாக அமையும் என்ற தனது நீண்ட நாள் நிலைப்பாட்டை மேற்படி அறிவிப்பின் மூலம் நிறைவேற்றிக்கொல்லாம் என நம்பியிருந்த தென் கொரிய ஜனாதிபதி யூனுக்கு இது பின்னர் தனக்கு எதிராகவே திரும்பும் என்பதை அப்போது உணர மறந்ததே உண்மையாகும்.



# பொலிகண்டியில் நாற்று மேடை செய்கை பாதிப்பு



கனமழை காரணமாக யாழ்ப்பாணம், பொலிகண்டியில் மேற்கொள்ளப்பட்டு வரும் நாற்று மேடை செய்கை பாதிப்பிற்குள்ளாகியுள்ளது.

இடைவிடாது பெய்த கனமழை காரணமாக நாற்று மேடையில் வளர்ந்திருந்த புகையிலை கன்றுகள் அழிவடைந்துள்ளன. அத்துடன், இலைகளில் பங்கஸ் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள புகையிலை செய்கையாளர்களுக்கு நாற்றுகளை விநியோகிக்கும் வகையில் இங்கு நாற்று மேடை செய்யப்பட்டு வரும் நிலையில், மழை, வெள்ள அபாயம் காணப்படுவதனால் புகையிலை செய்கை தாமதமாகி வருகிறது.

இதன் காரணமாக வளர்ச்சியடைந்த நாற்றுகளையும் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதனால் இழப்புகள் அதிகமாகும் நிலை ஏற்பட்டிருப்பதாக நாற்று மேடை செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# வவுனியாவில் மோசடியில் ஈடுபட்ட தனியார் நிறுவனம்

## வெளியேற விடாது ஒப்பந்தக்காரர்கள் முற்றுகை







(கி.வசந்தன்)

ஒப்பந்த வேலைகளில் ஈடுபட்ட கொழும்பை தலைமையகமாக கொண்ட தனியார் நிறுவனம் ஒன்று,ஒப்பந்த அடிப்படையில் விநியோக நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கு பல இலட்சம் ரூபாய் நிலுவை பணங்களை வழங்கவில்லை என தெரிவித்து குறித்த நிறுவனத்தை வெளியேற விடாது முற்றுகையிட்ட சம்பவம் ஒன்று வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, குருமன்காடு, காளி கோவில் வீதியில் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு சொந்தமான வீட்டில் குறித்த தனியார் ஒப்பந்த நிறுவனம் இயங்கி வந்துள்ளது.இந்த நிறுவனம் வீதி புனரமைப்பு உள்ளிட்ட பல்வேறு வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் செய்து வந்துள்ளது. அந்நிறுவனத்தினரை வீட்டு உரிமையாளரான பாராளுமன்ற உறுப்பினர் வீட்டை வழங்குமாறு விடுத்த கோரிக்கைக்கு அமைய அவர்கள் அந்த வீட்டில் இருந்த தமது பொருட்கள், வாகனங்கள், உபகரணங்களுடன் வெளியேறினர். குறித்த நிறுவனத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர், கிரவல் மண், வாகனம், வாகன திருத்துனர், சாப்பாடு போன்றவற்றை வழங்கியோருக்கு கடந்த 3 வருடமாக ஒப்பந்த அடிப்படையில் செய்து கொள்ளப்பட்ட பணம் வழங்கப்படாமல் உள்ளதால், அந்த பணத்தை வழங்கிய பின் அங்கிருந்து வெளியேறுமாறு விநியோகஸ்தர்கள்,பணியாளர்கள் கோரிக்கை விடுத்தனர். சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா பொலிசார் இரு தரப்பினரின் கருத்துக்களையும் கேட்டு, நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதனையடுத்து, குறித்த தனியார் நிறுவனத்தின் உயர் மட்ட குழுவினர் கொழும்பில் இருந்து வரவுள்ளதாகவும், அதுவரை குறித்த நிறுவனம் அவ் வீட்டில் இருந்து வெளியேற மாட்டார்கள் எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். இதனை ஏற்று முற்றுகையில் ஈடுபட்டோர் வெளியேறிச் சென்றனர். குறித்த நிறுவனம் தமக்கு ஒப்பந்த அடிப்படையில் பல்வேறு விநியோகங்களை மேற்கொண்டவர்களுக்கு ஒன்றரை கோடிக்கு மேல் பணம் செலுத்தவில்லை என பொலிசாரிடம் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சுகவீனமடைந்திருந்த யானை சிகிச்சை பலனின்றி மரணம்



(கி.வசந்தன்)

வவுனியாவில் சுகவீனமடைந்த நிலையில் மீட்கப்பட்ட காட்டு யானை நேற்று மரணமடைந்துள்ளதாக வவுனியா மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா குடாகச்சக்கொடி வயல் வெளியில் சுகயீனம் காரணமாக வீழ்ந்து கிடந்த யானை வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டு கடந்த ஐந்து நாட்களாக சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் யானை மரணமடைந்துள்ளது.

இதேவேளை குறித்த யானையின் மரணம் தொடர்பான உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பால்நிலை வன்முறையால் பாதிக்கப்படுபவர்களுக்கு உதவிகள்

## கிளிநொச்சி சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஆராய்வு



(ஜதுர்சிகா)

பால்நிலை வன்முறையால் பாதிக்கப்படுபவர்களுக்கான உடனடி உதவிகளை விரைவாக பெற்றுக் கொடுப்பதற்கான சாத்தியமான வழிமுறைகள் சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டன. கிளிநொச்சி மாவட்டத்தின் இறுதி காலாண்டுக்கான சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று (04) நடைபெற்றது. இந்த கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரனின் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது,கடந்த காலாண்டு கலந்துரையாடலின் போது இனங்காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள், அவற்றை நடைமுறைப்படுத்துவதனூடாக ஏற்பட்ட முன்னேற்றங்கள்,சிரமங்கள், புதிதாக அடையாளப்படுத்தப்பட்ட பிரச்சினைகள் அவற்றுக்கான தீர்மானங்கள் குறித்ததான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. மேலும் தற்போதைய சூழ்நிலையில் மாவட்ட ரீதியில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி தொடர்பான விடயங்களில் அதீத கவனம் செலுத்தப்பட்டது. பாடசாலை மாணவர்களின் வரவு ஒழுங்கின்மை, இடைவிலகல், மாணவர்களின் மீளிணைப்பு செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. இதனைவிட சட்டவிரோத செயற்பாடுகள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் துஷ்பிரயோகம், சிறுவர் தொழில்கள், பால்நிலை சார் வன்முறைகள், துறைசார்ந்து பணியாற்றுகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழப்பு



(ஜதுர்சிகா)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக நிலவிய சீரற்ற காலநிலை மற்றும் வெள்ள பாதிப்பு காரணமாக நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் அதிகளவான கால்நடைகள் உயிரிழந்துள்ளன அத்துடன் மாவட்டத்தில் உள்ள கால்நடை பண்ணையாளர்கள் தற்போதைய மேய்ச்சல் தரவையின்மை மற்றும் இயற்கை அனர்த்தம் என்பவற்றால் தங்களுடைய கால்நடை வளம் அழிந்து வருவதாக தெரிவித்துள்ளனர்

தங்களது வாழ்வாதாரமாகவுள்ள கால்நடைகளை பாதுகாக்க முடியாதிருப்பதாக கால்நடை பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வாழ்வாதாரத்துக்காக வழங்கப்பட்டுள்ள கால்நடைகள் பலவும் நோய்வாய்ப்பட்டு காணப்படுவதால் மாவட்டத்தின் பால் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதுடன் கால்நடைகளும் அழிந்து வருவதாக பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# தென்மராட்சிப் பிரதேசத்தில் வெள்ள நீரை வெளியேற்றல்



தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராமங்களில் நிறைந்துள்ள வெள்ள நீரை வெளியேற்றும் செற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பெரியமாவடிக் கிராமத்தில் உள்ள உப்புக்கேணிக் குளம் நிறைந்து சுமார் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வெள்ளத்தில் பாதிப்படைந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

இது தொடர்பாக கிராம மக்கள் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மற்றும் பொதுமக்கள் இணைந்து மோட்டார் மூலம் வெள்ள நீரை கடலுக்குள் வெயியேற்றியுள்ளனர்.

தென்மராட்சியின் ஏனைய கிராமங்களிலும் சாவகச்சேரி நகரசபை,சாவகச்சேரிப் பிரதேசசபை,தென்மராட்சிப் பிரதேச செயலகம்,இராணுவத்தினர் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து வாய்க்கால்களை சீர் செய்து வீடுகளுக்குள் தேங்கி நிற்கும் வெள்ள நீரை அப்புறப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் யாழ். மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.



நாவற்குழி இளந்தளிர் சிறுவர் கழகத்தின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை நாவற்குழி முந்நூறு வீட்டுத்திட்டப் பகுதியில் உள்ள வாய்க்கால்கள் சீர் செய்யப்பட்டன.

# ரில்வின் சில்வாவின் கருத்து மேர்வின் சில்வாவின் கருத்துக்கு ஒப்பானதாகும்

(செல்லையா பேரின்பராசா)

தேசிய மக்கள் சக்தியின் செயலாளரான ரில்வின் சில்வா, மாகாண சபை முறையை நீக்க வேண்டும் என்று அண்மையில் கருத்து வெளியிட்டுள்ளார். இக்கருத்து முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் அடிப்படைவாதக் கருத்துக்கு ஒப்பானதாக அமைந்துள்ளதென்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஸ்ரீநேசன் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளரிடம் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஸ்ரீநேசன் தொடர்ந்து உரையாற்றுகையில்,

விமல் வீரவன்ச, உதயகம்மன்பில,சரத் வீரசேகர போன்ற அடிப்படைவாதிகளின் கருத்துகளும் இப்பாணியில்தான் அமைந்துள்ளன. இடது சாரிக்கொள்கையின் அடிப்படையில், இயங்குவதாகக் கூறும் தேசிய மக்கள் சக்தியினரின் செயலாளர்,பாரம்பரிய பேரின அடிப்படைவாதத்தில் இருந்து விடுபடவில்லை என்பது மட்டும் தெரிகிறது. மாகாண சபை முறையினைப் பலப்படுத்த உள்ளதாகத் தேர்தல் காலங்களில் குறிப்பிட்ட தேசிய மக்கள் சக்தியினர், தேர்தலின் பின்னர் தடம் மாறிப் பயணிக்கவுள்ளார்களா? என்ற சந்தேகத்தை ரில்வின் சில்வா ஏற்படுத்தியுள்ளார்.



புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது கூட்டாட்சி அடிப்படையில் அமைய வேணடும் என்று எமது தமிழரசுக் கட்சியினர் வலியுறுத்தி வருகின்றனர். அப்படியிருக்க குறைந்தளவான அதிகாரப்பகிர்வையுடைய மாகாண சபை முறையையே நீக்க வேண்டும் என்று ரில்வின் சில்வா கூறுவது தமிழர்களின் அறவழி ஆயுதவழி சார்ந்த உரிமைப் போராட்டத்தினை கொச்சைப்படுத்துவதாக அமைந்துள்ளது.

சுமார் 60 ஆயிரம் போராளிகள் மற்றும் 4 இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்களின் உயிர் இழப்பினை மதிக்காத அடிப்படைவாதக் கருத்தாகவே ரில்வினின் கருத்தை தமிழர்களும் தமிழ்த் தேசிய வாதிகளும் கருதுகின்றனர்.

அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ ,இனவாதத்தை ஒழிக்க வேண்டும் என்று கூறுகின்றார்.அதேவேளை, ரில்வின் சில்வா இனவாதத்தைக் கை விடாமல் உள்ளார். அப்படியென்றால் தேசிய மக்கள் சக்தியின் இடதுசாரிப் பாசறைக்குள், இன்னும் இனவாதிகள் உள்ளதை இது காட்டுகின்றது.

இப்படியானவர்கள் தேசிய மக்கள் சக்திக்குள் இருப்பது என்பது தேசிய மக்கள் சக்தியை இனவாத அமைப்பாகவே காட்ட வழிவகுக்கின்றது. இந்தப்போக்கு நீடித்தால் பச்சை,நீலக் கட்சி போன்றே சிவப்புக் கட்சியையும் தமிழர்கள் எடை போட்டு விடுவார்கள்.

எனவே, தேசிய மக்கள் சக்தி அரசானது தேசிய இனப்பிரச்சினையை நியாயமான முறையில் கூட்டாட்சி முறை மூலமாதத் தீர்க்க முன்வர வேண்டும். அதன் மூலமாகத் தமிழர்களின் மனங்களை வெற்றி கொள்ள வேண்டும். கடந்த காலத்தில் மக்களை ஏமாற்றிய ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திக் கட்சி, பொதுஜனப் பெரமுன கட்சிகளுக்குப் படுதோல்வி ஏற்பட்டிருப்பதை தேசியமக்கள் சக்தியினர் நினைவில் கொள்ள வேண்டும் என்றார்.

# நிந்தவூர், காரைதீவு பிரதேசங்களில் நாளை முதல் சீரான நீர்வழங்கல்

(சுலைமான் றாபி)

வெள்ளப்பெருக்கு காரணமாக, அம்பாறை கொண்டவட்டுவான் – வடசரி பகுதியில் அமைக்கப்பட்டிருந்த நிந்தவூர் பிரதேசத்திற்கான குடிநீர் குழாயானது உடைந்ததனால் கடந்த ஒரு வாரகாலமாக நீர் விநியோகம் தடைப்பட்டிருந்தது.

இதனால் நிந்தவூர், காரைதீவு, மாளிகைக்காடு மற்றும் சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களுக்கு வழங்கப்படும் குடிநீர் விநியோகம் முற்றாக தடைப்பற்றிருந்ததுடன் அவ்வப்போது பௌசர்களிலும், நேர முகாமை அடிப்படையிலும் நீர் இணைப்புக்கள் மூலமாக குடிநீர் விநியோகமானது வழங்கப்பட்டு வந்திருந்தது.

இந்நிலையில் நாளை 06 ஆம் திகதி முதல் நீர் விநியோகத்தினை சீராக வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதாக நிந்தவூர் பிரதேச தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச்சபையின் நிலைய பொறுப்பதிகாரி கே.எல்.எம். இப்ராஹிம் தெரிவித்தார்.

இந்த பிரதான நீர் குழாய் இணைப்பானது, நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேசத்தில் அமைந்துள்ள தேசிய நீர் வளங்கள் வடிகாலமைப்புச் சபையின் விநியோக களஞ்சியத்தின் (சுத்திகரிப்பு மற்றும் விநியோகம்) மூலமாக சேகரிக்கப்பட்டு, அதன் மூலம் பிரதானமாக நிந்தவூர் மற்றும் காரைதீவு போன்ற பிரதேசங்களுக்கு நீர் விநியோகம்



இடம்பெற்று வருகிறது.

தற்போது பிரதான நீர்க்குழாயினை சீர்செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் போதிய அளவு நீர் வழங்க முடியாத காரணத்தினால் பொதுமக்களுக்காக பௌசர்கள் மற்றும் அவர்களது நீர் இணைப்புக்கள் மூலம் நீர் விநியோகம் (குறிப்பிட்ட மணித்தியாலங்கள் வரை) இடம்பெற்று வருகின்றது.தற்போது குறைந்த அமுக்கத்தின் மூலமாக வழங்கப்படும் நீரினை தாங்கிகளில் ஏற்ற முடியாது. குடிப்பதற்கு மாத்திரமே பயன்படுத்த முடியும். எனவே பௌசர்கள் மூலம் அல்லது இணைப்பு மூலம் வருகின்ற நீரை குடிப்பதற்கு மாத்திரம் சேமித்து வைத்துக் கொள்ளுமாறும், பெரும்பாலும் நாளை முதல் சீரான முறையில் நீர் விநியோகம் செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

### "அருணலு கடன் வேலைத்திட்டம்"

# அட்டாளைச்சேனையில் ஒருநாள் செயலமர்வு





(எஸ்.எம்.அறூஸ்)

அட்டாளைச்சேனை சமுர்த்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட கிராமத்திற்கு சமுர்த்தி வங்கி எனும் தொனிப்பொருளிலான அருணலு கடன் வேலைத்திட்டம் தொடர்பான ஒருநாள் செயலமர்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம்.ஹமீட் தலைமையில் இடம்பெற்ற இச்செயலமர்வில் பிரதம அதிதியாக அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பீ.ரீ. எம்.இர்பான் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சமுர்த்தி வங்கிகள் மக்களுக்கு பல்வேறுபட்ட பணிகளையும், வசதி வாய்ப்புக்களையும் மேற்கொண்டு வரும் நிலையில் அன்றாடம் தொழிலில் ஈடுபட்டுள்ள சமுர்த்தி வங்கி அங்கத்தவர்களுக்கு வியாபார மற்றும் நுகர்வு கடன்பொருட்டு கிராமங்களில் உள்ள சமுர்த்தி சமுதாய அமைப்பின் ஊடாக கடன் வழங்கும் திட்டம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் கிராம மட்டத்திலுள்ள 50 சமுர்த்தி சமுதாய அமைப்பின் பொருளாளர்கள் மற்றும் குறிப்பிட்ட கிராம பிரிவிற்கான சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மேற்படி செயலமர்வில் பங்குபற்றினர்.

இச்செயலமர்வில் சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் டி.பரமானந்தன் மற்றும் தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம்.ஹமீட் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு செயலமர்வை வழிநடத்தினர். இங்கு சமுர்த்தி திட்ட முகாமையாளர் எஸ்.எல்.அஸ ீஸ், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம்.உனை கலந்து கொண்டனர்.

# அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலை ஆசிரியர்களுக்கு ஏமாற்றம்

(கியாஸ் ஷாபி)

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில், பயிற்சியை தொடர்வதற்காக, கல்வி அமைச்சினால் வர்த்தமானி அறிவித்தல் மூலம், கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு முரணான வகையில், தற்போது நேர்முகப் பரீட்சைக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் 2024ஃ2025 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்கு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக, கடந்த ஜ"லை மாதம் வர்த்தமானி அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இதற்கான நேர்முக பரீட்சைகள் எதிர்வரும் திங்கட்கிழமை (09.12. 2024) நடைபெறும் என கடிதம் மூலம் விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அரச பாடசாலைகளில் கற்பிக்கும் பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு இரண்டு வருட கால பயிற்சியினை வழங்குவதற்காக, இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

தமிழ் மொழி மூலமாக, கொட்டகல, மட்டக்களப்பு,

அட்டாளைச்சேனை மற்றும் கோப்பாய் ஆகிய நான்கு கலாசாலைகளுக்கும் விண்ணப்பிக்க முடியும் என அதில் குறிப்பிடப்பட்டிருந்தன.

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் தமிழ், ஆங்கிலம், உடற்கல்வி, ஆரம்பக் கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் இஸ்லாம் ஆகிய 6 பாடங்களுக்காக ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும் என அந்த வருத்தமானியில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கு விண்ணப்பித்த அனைத்து ஆசிரியர்களும் வேறு வேறு ஆசிரியர் கலாசாலைகளுக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கிழக்கு மாகாணம் மாத்திரமன்றி, நாடு பூராகவும் இருந்து இஸ்லாம் பாட பயிற்சிக்காக விண்ணப்பித்தவர்களுக்கு வடமாகாணத்தில் உள்ள கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கு நேர்முகப்பரீட்சைக்கு வருமாறு அழைக்கப்பட்டிருப்பதாகவும், இது வர்த்தமானி அறிவித்தலுக்கு முரணானவை எனவும், ஆசிரியருக்கு செய்கின்ற அநீதி எனவும் கூறுகின்றனர்.

மேலும், இஸ்லாம் பாட பயிற்சிநெறி, இல்லாத கோப்பாய் கலாசாலைக்கு ஆசிரியர்கள் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருப்பதற்கான காரணம் என்ன எனவும் இவர்கள் வினவுகின்றனர்.

இதேபோன்று, ஆரம்பக் கல்வி, ஆங்கிலம், உடற்கல்வி, தமிழ் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கும் கோப்பாய், மட்டக்களப்பு மற்றும் கொட்டகலை ஆகிய கலாசாலைகளுக்கு நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம் எனவும் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயத்தில், கல்வி அமைச்சு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தங்களுடைய உரிமைகளை பாதுகாக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மீன்பிடி பிரதி அமைச்சர் அக்கரைப்பற்றுக்கு விஜயம்

(றிஸ்வான் சாலிஹ்)

அக்கரைப்பற்று தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள் விடுத்தவேண்டுகோளுக்கிணங்க, வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட அக்கரைப்பற்று மீனவர்களை சந்திக்க கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன அண்மையில் அக்கரைப்பற்று மீனவர்களை கடற்கரையில் வைத்து சந்தித்து மீனவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டார்.

இப்பிரதேச மீன்பிடித்துறையை முன்னேற்றுவது இந்த அரசின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருக்கின்றது. மீனவர்களுக்கு சகல விதமான உதவிகளையும் இந்த அரசாங்கத்தின் ஊடாக செய்து கொடுப்பதற்கு ஜனாதிபதி திறம்பட செயற்பட்டு வருகின்றார் என்று



கடற்றொழில் பிரதியமைச்சர் மீனவர்கள் மத்தியில் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் அக்கரைப்பற்று செயற்பாட்டாளர்களான றமீஸ் முகைடீன், அபூ ஷகீட், சிறாஜ் மஸ /ர், சட்டத்தரணி றாஸி மற்றும் மீனவ சங்க தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் உயர்தரப் பரீட்சை மீண்டும் ஆரம்பம்



(ஆரையம்பதி நிருபர்)

சீரற்ற காலநிலை காரணமாக கல்வி அமைச்சினால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைதியான முறையில் நடைபெற்றது. கிழக்கு மாகாணத்தில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக கல்வி அமைச்சினால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சை மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மூன்று கல்வி வலையங்களிலும் அமைக்கப்பட்டிருந்த பரீட்சை நிலையங்களில் மிக அமைதியான முறையில் ஆரம்பமானது. முன்னெடுக்கப்பட்டது மட்டக்களப்பு மாவட்டத்தில் ,இம்முறை 7221 பாடசாலை பரீச்சாத்திகள் – தனியார் 2361 தோற்றுகின்றனர். 69 மாவட்டத்தில் பரீட்சை நிலையங்களும் 8 ,ணைப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதுடன் மாவட்டத்தில் ,ம்முறை மொத்தமாக 9583 பேர் பரிட்சைக்கு தோற்றுகின்றனர்.

# அடுத்தவாரத்தில் அமைச்சுக்கள் மட்டத்தில் பாரிய மாற்றங்கள்!!

(முகம்மட் முக்தார்)

கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட அமைச்சுக்கள் மட்டத்தில் பாரிய மாற்றங்கள் அடுத்தவாரத்தில் கிழக்கு மாகாண ஆளுநரால் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஆளுநர் செயலக வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

கிழக்கு மாகாண சபையில் கடமையாற்றவென 05 க்கு மேற்பட்ட இலங்கை நிருவாக சேவையின் முதலாம் வகுப்பு விசேடதர அதிகாரிகள் பொது நிருவாக அமைச்சினால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் பேரவைச்செயலகம், முதலமைச்சு, சுகாதார அமைச்சு, மாகாண பொதுநிருவாக பிரதிப்பிரதம செயலகம், மாகாண பயிற்சியும் ஆளணியும் பிரதிப்பிரதம செயலகம் என்பவற்றில் செயலாளர், பிரதிச் செயலாளர் பதவிகளுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றது.

இவ்வெற்றிடங்களுக்கு பொது நிருவாக அமைச்சிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ள புதிய அதிகாரிகள் நியமனம் செய்யப்பட உள்ளதாகவும் ஆளுநரின் செயலாளர் மதன்நாயக்கா தெரிவித்தார். சில அதிகாரிகள் சுமார் 10 வருடங்களுக்கு மேல் கிழக்கு மாகாண சபையில் தொடர்ச்சியாக கடமையாற்றுவதால் அவர்களை மீளவும் பொது நிருவாக அமைச்சுக்கு விடுவிப்பதற்கும் ஆளுநர் தீர்மானித்துள்ளதாக தெரிய வருகிறது.

கிழக்கு மாகாண ஆளுநராக கடமையாற்றிய அனுராதா யஹம்பத்தால் நியமனம் செய்யப்பட்டவர்கள் தற்போதும் அமைச்சு செயலாளர்களாக தொடர்ந்தும் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

# முதலாவது கிப்லா அல்-அக்ஸா



### முதலாவது கிப்லா

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது மிஃராஜ் பயணத்தின் போது முஸ்லிம்கள் மீது விதியாக்கப்பட்ட ஐவேளைத் தொழுகைக்கான முதலாவது கிப்லாவாக அல்-மஸ்ஜிதுல் அக்ஸாவே காணப்பட்டது. இத்திசையை நோக்கியே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அவர்களது தோழர்களும் சுமார் 16 மாதங்கள் தொழுது வந்தார்கள்.

### நுபுவ்வத் இறங்கிய மற்றும் அருள்நிறைந்த பூமி

இப்பூமி ஷாம் என வரலாற்றில் அழைக்கப்படுகின்றது. தற்போதைய சிரியா, ஜோர்தான், லெபனான், பலஸ்தீன், சினாய் பாலைவனம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசமே ஷாம் எனப்படும்.

நபி இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம், நபி லூத் அலைஹிஸ் ஸலாம், நபி ஸாலிஹ் அலைஹிஸ் ஸலாம், நபி தாவுத் அலைஹிஸ் ஸலாம், நபி சுலைமான் அலைஹிஸ் ஸலாம், நபி மூஸா அலைஹிஸ் ஸலாம், நபி ஸகரிய்யா அலைஹிஸ் ஸலாம், நபி யஹ்யா அலைஹிஸ் ஸலாம், நபி யூஸுஃப் அலைஹிஸ் ஸலாம், நபி ஈஸா அலைஹிஸ் ஸலாம் என பல நபிமார்களின் வரலாறு இப்பூமியுடன் தொடர்பு படுகின்றது.

### நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வானிலிருந்து இறங்கும் பூமி

மறுமைநாள் நெருங்கும் போது நபி ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மீண்டும் அல்லாஹ்வின் கட்டளைப்படி இப்பூமிக்கு இறங்குவார்கள் தஜ்ஜால் இப்பூமியில் வைத்தே கொல்லப்படுவான். (இப்னு மாஜா)

### பாலஸ்தீனத்தின் பாதுகாப்பிற்காக குரல் கொடுக்கும் நாடுகளும் அமைப்புகளும்

- 15 டிசம்பர் 1988 இல், ஐ.நா பொதுச் சபை தீர்மானம் 43/177 நவம்பர் 1988 இன் பாலஸ்தீனிய சுதந்திரப் பிரகடனத்தை ஒப்புக்கொண்டது.
- கிழக்கு ஜெருசலம் மற்றும் காசா பகுதியை உள்ளடக்கிய மேற்குக் கரை 1988 ஆம் ஆண்டின் இறுதியில், பாலஸ்தீனிய அரசு 78 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டது.
- ஜூன் 2024 நிலவரப்படி, ஐக்கிய நாடுகள் சபையின் 193 உறுப்பு நாடுகளில் 146 அல்லது அனைத்து ஐ.நா உறுப்பினர்களில் 75% க்கும் அதிகமான நாடுகளால் பலஸ்தீனம் ஒரு இறையாண்மை நாடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- பு-20 இல் அங்கத்துவம்பெற்ற ஆர்ஜென்டினா, பிரேசில், சீனா, இந்தியா, இந்தோனேசியா, ரஷ்யா, சஊதி அரேபியா, தென்னாப்பிரிக்கா, துருக்கி போன்ற ஒன்பது நாடுகளுடன் நிரந்தர அழைப்பு நாடாகிய ஸ்பெயினும் பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரித்துள்ளன.
- 14 அக்டோபர் 1974 இல், பாலஸ்தீன விடுதலை அமைப்பு ஐ.நா பொதுச் சபையால் பலஸ்தீன மக்களின் பிரதிநிதியாக அங்கீகரிக்கப்பட்டது.
- 29 நவம்பர் 2012 அன்று, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை தீர்மானம் 67/19 பாலஸ்தீனத்திற்கு உறுப்பினர் அல்லாத பார்வையாளர் மாநில அந்தஸ்தை வழங்கியது.
- 17 டிசம்பர் 2012 அன்று, ஐ.நா நெறிமுறையின் தலைவர் Yeocheol Yoon அனைத்து அதிகாரபூர்வ ஐக்கிய நாடுகளின் ஆவணங்களிலும் செயலகத்தால் "ஸ்டேட் ஆஃப் பாலஸ்தீன்" என்ற அரசியலமைப்புப் பெயரைப் பயன்படுத்த வேண்டும் என்று முடிவு செய்தார்.
- 10 மே 2024 அன்று, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை தீர்மானம் ES-10/23 பாலஸ்தீனத்திற்கு, பாலஸ்தீன அரசுக்கு ஐ.நா வில் கூடுதல் உரிமைகளை வழங்கியது. இதில் உறுப்பு நாடுகளுடன் அமர்ந்திருப்பது, முன்மொழிவுகள் மற்றும் நிகழ்ச்சி நிரல் உருப்படிகளை அறிமுகப்படுத்துவதற்கான உரிமை மற்றும் குழுக்களில் பங்கேற்கும் உரிமை ஆகியன வழங்கப்பட்டுள்ளன.

### மனித நேயமும் சமயங்களும்

மனிதநேயம் உலகில் மங்கி மறைந்து போகின்ற தருணத்தில் அதை ஒருகணம் மீட்டிப் பார்த்து மிளிரச்செய்வது சமயங்களை மதக்கோட்பாடுகளை சர்வதேச சிந்தனைகளை நேசிக்கின்ற, பேசுகின்ற சகலரதும் தார்மீகக் கடமையாகும்.

உலகில் தோன்றிய சகல சமயங்கள், கோட்பாடுகள், சித்தாந்தங்கள் என்பன இம்மனிதநேயத்தைப் பற்றி ஆழமாகப் பேசியிருக்கின்றன.

பௌத்த சமயம் போதித்த முதன்மையான நன்னடத்தைகள் அன்புறு நேயம், கருணை, இரக்கம், நல்லிணக்கம், நிதானம் ஆகியவையாகும். இவற்றில் அன்புறுநேயம் முதலிடத்தில் வருகிறது. துக்கத்தை போக்க உதவும் வழிமுறைகளில் முக்கியமானதும் அன்புறுநேயம், நற்குண சீலம் என்கிறது.

"இந்து சமயத்தில் அன்பும் சிவமும் ஒன்றென்று அறிந்த பின் அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" என்பது தான் இந்து சமயத்தின் தாத்பரியம் என்கின்றது. திருமூலர் கூறும்போது "நீங்கள் பிறர் மீது அன்பு செலுத்தினால் இறைவன் உங்கள் மீது அன்பு செலுத்துவான்" என்கின்றார்.

இராமாயணத்திலும் மகாபாரதத்திலும் கூட "மாலை நேரங்களில் போர் செய்வது தவிர்க்கப்பட வேண்டும், பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது போர்புரிவது தவிர்க்கப்பட வேண்டும் என்று வழிகாட்டப்பட்டுள்ளது.

ஏசுபிரான் அவர்கள் அறிவும் அன்பும் கருணையும் இரக்கமும் நட்பும் நற்குணமும் மனிதநேயமுமிக்கவராய் வாழ்ந்தார்.

### இஸ்லாம் மனித நேயத்தை மிகவும் வலியுறுத்துகிறது

பிறரை நேசிப்பதை இறை நம்பிக்கையின் அடையாளமாகவும் பிறர் துன்பங்களை நீக்குவதனை இறைவணக்கமாகவும் கருதுகின்றது. அவ்வகையில் உலகில் தோன்றிய பௌத்தம், கிறிஸ்தவம், இந்து, கத்தோலிக்கம், இஸ்லாம் போன்ற எல்லா சமயங்களும் அன்பும் கருணையும் இரக்கமும் நட்பும் அடுத்த மனிதர்களுக்கு உதவும் தன்மையும் இன மொழி பாராது, பாகுபாடு பாராது அடுத்த மனிதர்களை மனித நேயத்தோடு வாழ வைக்க வேண்டும் எனப் போதிக்கிறது. எனினும் பாலஸ்தீன மக்களின் உடல், பொருள், உயிர், உரிமைகளை அனைத்து சமயங்களும் போதிக்கும் மனிதநேயத்துடன் நோக்கும் எவரும் அம்மக்களின் மீது கருணை செலுத்துவர் என்பதில் ஐயமில்லை. 1948 ஆம் ஆண்டு முதல் லெபனானிலும் பலஸ்தீனிலும் 134,000 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பல இலட்சம் பேர் படுகாயத்துக்குட்பட்டுள்ளனர். இவர்களில் அப்பாவி பொதுமக்கள், பெண்கள், சிறார்கள், வயோதிபர்கள், நோயாளிகளே அதிகமானவாகள் என்பது குறிப்பிடத்தக்கது.

### பலஸ்தீன - இலங்கை உறவுகள்

பாலஸ்தீன் – இலங்கை உறவுகள் என்பது பாலஸ்தீன அரசுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளைக் குறிக்கிறது. வரலாற்று ரீதியாக இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மிகவும் நட்புறவைக் கொண்டிருந்தன.

பலஸ்தீனத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் 1975 இல் பாலஸ்தீன விடுதலை அமைப்பு (PLO) கொழும்பில் ஒரு தூதரகத்தைத் திறந்த போது தொடங்கியது. 15 நவம்பர் 1988 இல் பாலஸ்தீனிய சுதந்திரப் பிரகடனத்திற்குப் பிறகு, பாலஸ்தீன அரசை அங்கீகரித்த உலகின் முதல் சில நாடுகளில் இலங்கையும் மாலைத்தீவுகளும் அடங்கும் என்பதுடன், தற்போது நடைபெற்று வரும் இஸ்ரேல் – பாலஸ்தீன மோதலுக்கு இரு நாடுகளின் தீர்வை ஆதரிப்பதுடன், ஐ.நா. வில் கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு தீர்மானத்திலும் இலங்கை பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்போதைய போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சரும் நாடாளுமன்ற சபை முதல்வருமான பிமல் இரத்நாயக் இலங்கை பலஸ்தீன் ஒருமைப்பாட்டு இயக்கத்தின் தலைவராகச் செயற்படுவதானது, பாலஸ்தீன் மக்கள் விவகாரத்தில் இலங்கை காட்டும் இராஜதந்திர உறவின் உறுதிப்பாட்டுடன் கூடிய அக்கறையை சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்டுகிறது.

### இலங்கை முஸ்லிம்களின் வகிபாகம்

பாலஸ்தீன மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனவழிப்புக்கு எதிராக இலங்கை பலஸ்தீன நற்புறவுச் சங்கம் போன்ற பல அமைப்புக்களும் சிந்தனை யாளர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் பலரும் குரல்கொடுத்து வரும் இந்நிலையில் இலங்கை முஸ்லிம்கள் மீதும் பாரிய பொறுப்புக்களும் கடமைகளும் உள்ளன. பலஸ்தீனப் பிரச்சினை என்பது அனைத்து முஸ்லிம்களின் பிரச்சினையாகும். பாலஸ்தீனம் ஓர் அரேபிய இஸ்லாமிய நாடு. அதைத் தாக்குவது என்பது அனைத்து முஸ்லிம்களையும் தாக்குவதாகும். பொதுவாக லெபனான், பலஸ்தீன நிலமும் குறிப்பாக காசாவும் சமீப காலத்தில் எதிர்கொள்ளும் மனிதாபிமானக் குற்றமாகும் எனச் சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. பாலஸ்தீன பொதுமக்கள், மஸ்ஜித்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், முகாம்கள், வீடுகள் மீது தொடுக்கப்படும் மனிதாபிமானமற்ற தாக்குதல்கள் சர்வதேச சட்டம் மற்றும் மனித உரிமைகளை மீறும் மிருகத்தனமான இனவழிப்பாகும்.

ஒருவர் மீது இழைக்கப்படும் அநீதியை அகற்றுவதற்கு அல்லது அவருக்கு உதவிக்கரம் நீட்டுவதற்குத் தூண்டும் வகையில் செயற்படுவது ஈமானிய அடையாளமாகும். இறுதி வெற்றி நிச்சயமாக அல்லாஹ்விடமிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கும் அது தவிர்க்க முடியாதது என்பதையும் நாம் உறுதியாக நம்ப வேண்டும். ஏனென்றால் அது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். அவர்களுக்காக அதிகமாக துஆச் செய்வோம் குரல்கொடுப்போம் இராஜ தந்திர முயற்சிகளில் ஈடுபடுவோம் எமது சக்திக்கும் ஆற்றலுக்கும் உட்பட்ட வகையிலான அனைத்து முயற்சிகளிலும் தொடராக ஈடுபடுவோம்.

"நிச்சயமாக அல்லாஹ்வின் உதவி சமீபத்திலேயே இருக்கிறது." (அல்-பகரா : 214)

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை

ஆய்வு மற்றும் வெளியீட்டுப் பிரிவு

## இந்திய தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார நிகழ்ச்சித்திட்டம்

# கண்டியில் 60ஆவது ஆண்டு நிறைவு விழா








(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்திய தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார நிகழ்ச்சித்திட்டத்தின் **(ITEC)** 60ஆவது ஆண்டு நிறைவு விழா இந்திய உதவி உயர்ஸ்தானிகர் வி. எஸ் சரண்யா தலைமையில் அண்மையில் கண்டி மகாவலி ரீச் ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்திய அரசாங்கத்தினால் 1964 ஆம் ஆண்டு நிறுவப்பட்டுள்ள இந்திய தொழில்நுட்ப பொருளாதார நிகழ்ச்சி திட்டம் **(ITEC)**ஆனது 160 நாடுகளை இணைத்து முன்னெடுத்து வருகின்றது இத்திட்டத்தின் கீழ்., உலகின் பல நாடுகளில் உள்ள அரச ஊழியர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட இலட்சக்கணக்கான மக்களுக்கு பயிற்சிகள் அளித்துவரும் சர்வதேச திறன் மேம்பாட்டிற்கான மிகப் பழைமையான நிறுவனமாகும். இந்திய தொழில்நுட்ப பொருளாதார கூட்டு நிறுவனத்தின் தோற்றம் மற்றும் அதன் மூலம் இலங்கைக்கு வழங்கும் மற்றும் வழங்கவிருக்கும் சேவைகள் குறித்து கண்டி இந்திய உதவித்தூதுவர் வி.எஸ்.சரண்யா விளக்கமளித்தார்.

# வீடுகளில் பொருட்களை திருடி விற்பனை செய்தவர் கைது





ஹற்றன் பகுதியிலுள்ள வீடுகளுக்குள் புகுந்து பொருட்களை திருடி, விற்பனை செய்த சந்தேக நபர் ஒருவரை ஹற்றன் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று (04) கைது செய்துள்ளனர்.

வீடுகளில் உள்ள உடமைகளை சிலர் திருடுவதாக ஹற்றன் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்த ஹற்றன் பொலிஸ் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், தங்களுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தினர். அவரிடமிருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில், திருடப்பட்ட பொருட்கள் காலணிகள், எரிவாயு சிலிண்டர்கள், ஆடைகள் என்பன அப் பிரதேசத்தில் பலருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பொருட்களை கொள்வனவு செய்த 6 பேரை கைது செய்துள்ளதாகவும், திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் ஹற்றன் பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடையவர் என்றும் அவர், போதைப்பொருளுக்கு அடிமையானவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட ஏழு சந்தேக நபர்களையும் ஹற்றன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான மின்னஞ்சல் அழிப்பு

## வேண்டுமென்றே செய்யப்பட்டதாக பிரதி சொலிசிட்டர் தெரிவிப்பு



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய மின்னஞ்சல் தொகுதியை வேண்டுமென்றே அழித்தது தொடர்பிலான நிபுணர் அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு இன்னும் மூன்று மாதங்கள் தேவையென பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்னகோன், கொழும்பு மேலதிக நீதிவான் கெமிந்த பெரேரா முன்னிலையில் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

அரச இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் மத்திய தரவு மையம் நான்கு மாதங்களாக செயலிழந்துள்ளதாகவும் அதனை மறுசீரமைக்க மூன்று மாதங்கள் ஆகலாம் எனவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார். செயலிழந்து போயுள்ள தரவு மையத்தை சீரமைக்க ஒரு கோடிக்கு மேல் செலவாகும். **(IBM)** நிறுவனத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த தேர்தல்கள் காரணமாக இதற்கான நிதியை ஒதுக்க முடியாத காரணத்தினால் மூன்று மாதங்களுக்கு மேல் ஆகும் என அரச இரசாயன பரிசோதகர் தெரிவித்துள்ளதாகவும் சொலிசிட்டர் குறிப்பிட்டுள்ளார் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான மின்னஞ்சல் தகவல்களை அழித்தது கப்பலில் ஆபத்தில்லை என்று துறைமுக மாஸ்டரை ஏமாற்றி இலங்கை கடல் எல்லைக்குள் நுழைவதற்கு துறைமுக மாஸ்டரின் அனுமதியைப் பெறுவதற்கு கப்பல் நிறுவனத்தின் உள்ளூர் பிரதிநிதிகள் செயற்பட்டுள்ளதாக,உள்ளூர் கப்பல் நிறுவன அதிகாரிகள் 7 பேர் தொடர்பிலான விசாரணைக்கு அழைத்த போதே,பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்னகோன் இவ்வாறு தெரிவித்திருந்தார். மின்னஞ்சல் தரவுகள் வேண்டுமென்றே நீக்கப்பட்டதா என்பது குறித்த நிபுணர் அறிக்கையைப் பெற மேலும் மூன்று மாத கால அவகாசம் தேவை என்பதால், வழக்கு விசாரணையை மூன்று மாதங்களுக்கு ஒத்திவைக்குமாறும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்திடம் கோரினார். தெற்காசியாவிலே மிக மோசமான மற்றும் மிகப்பெரிய கடல் மாசை ஏற்படுத்திய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் பெருமளவிலான தீ பற்றலின் பின்னர் அதன் தரவு தளத்தை மற்றும் மின்னஞ்சல் செய்திகளை வேண்டுமென்றே நீக்கப்பட்டதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்னகோன் மேலும் தெரிவித்தார்.

இந்த விசாரணைகள் கடுமையான குற்றச்சாட்டை முன்வைத்து நாட்டுக்கு பெரும் அழிவை ஏற்படுத்தியதை உறுதி செய்வதற்கும் கண்டறிவதற்கும் செய்யப்படும் விசாரணையாகும்.அதனால் தரவுகளை அழித்தமைக்கு உள்ளூர் முகவர் நிறுவனம் பொறுப்புக் கூற வேண்டும் என்றார்.



# பொற்கோயிலில் பரபரப்பு; முன்னாள் முதலமைச்சர் மீது துப்பாக்கிச்சூடு



அமிர்தசரஸ் பொற்கோயிலில் பணியில் இருந்த, பஞ்சாப் முன்னாள் துணை முதல்வர் சுக்பிர் சிங் பாதல் மீது மர்மநபர் நேற்று துப்பாக்கிச் சூடு நடத்தினார். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

பஞ்சாபில் பலமுறை ஆட்சியில் இருந்த அகாலி தளம் கட்சியை சேர்ந்தவர் சுக்பிர் சிங் பாதல், மறைந்த முன்னாள் முதல்வர் பிரகாஷ்சிங் பாதலின் மகனாவார். இவர் பஞ்சாபின் துணை முதல்வராக இருமுறையும், பிரோஸ்புர் லோக்சபா தொகுதி எம்.பி. ஆகவும் பதவி வகித்துள்ளார். சீக்கிய மதத்தை நிந்தனை செய்த, தேரா சச்சா சவுதா அமைப்பின் தலைவருக்கு, அப்போது துணை முதல்வராக இருந்த சுக்பிர் சிங் பாதல், தன் அதிகாரத்தை பயன்படுத்தி மன்னிப்பு வழங்கியதாக குற்றஞ்சாட்டப்பட்டார். இந்த விவகாரங்களை சீக்கிய மதத்தின் உயரிய அமைப்பான அகாலி தக்த் விசாரித்தது. குற்றங்களை ஒப்புக்கொண்ட சுக்பிர் சிங் பாதல், அகாலி தக்த் முன் கடந்த ஆகஸ்டில் பகிரங்க மன்னிப்பு கோரினார். இதையடுத்து, அவருக்கு கடந்த திங்கட்கிழமை பொற்கோயிலை சுத்தம் செய்யும் தண்டனை அளிக்கப்பட்டது.

அமிர்தசரஸ் பொற்கோயிலில் சுத்தம் செய்யும் பணியை சுக்பிர் சிங் பாதல் உள்ளிட்ட தலைவர்கள் நிறைவேற்றினர். அப்போது, சக்கர நாற்காலியில் வந்த சுக்பிர் சிங், தண்டனை விபரங்கள் அடங்கிய பதாகையை கழுத்தில் அணிந்து, கையில் ஈட்டி ஏந்தியபடி பொற்கோயிலின் வாயிலில் அமர்ந்திருந்த வேளையில் நேற்று அவர் மீது மர்ம நபர் துப்பாக்கி சூடு நடத்தினார். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. அருகே இருந்தவர்கள் உடனடியாக துப்பாக்கிச் சூடு நடத்தியவரை மடக்கி பிடித்ததால், குண்டு படாமல் அதிஷ்டவசமாக சுக்பிர் சிங் பாதல் உயிர் தப்பினார். துப்பாக்கிச்சூடு நடத்திய நபரை பஞ்சாப் பொலிசார் கைது செய்து விசாரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தெலுங்கானாவை உலுக்கிய நிலநடுக்கம்



தெலுங்கானாவின் முலுகு மாவட்டத்தில் நேற்று காலை 7:27 மணிக்கு 5.3 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

தெலுங்கானா மாநிலத்தில் திருவூரு, ஜக்கையா பேட்டை, ஹைதராபாத், ஹனுமகொண்டா, கம்மம், பத்ராத்ரி, உட்பட பல்வேறு மாவட்டங்களில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. 40 கி.மீ ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என தேசிய நிலஅதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆந்திராவிலும் லேசான நில அதிர்வு ஏற்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து உடனடியாக தகவல் எதுவும் வெளியாகவில்லை.

அதிகாரிகள் நிலைமையை மதிப்பிடும் அதே நேரத்தில் குடியிருப்பாளர்கள் விழிப்புடன் இருக்கவும், பூகம்பங்களின் போது நெரிசலான அல்லது பாதுகாப்பற்ற கட்டமைப்புகளைத் தவிர்க்கவும் நிபுணர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நாக்பூரில் லேசான நில அதிர்வுகள் உணரப்பட்டதாக இந்திய வானிலை ஆய்வுத் துறை (ஐஎம்டி) வட்டாரங்கள் மற்றும் உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர். தெலுங்கானாவுக்கு மிக அருகில் அமைந்துள்ள கட்சிரோலியிலும் லேசான நில அதிர்வுகள் ஏற்பட்டதாக மாவட்ட தகவல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இறுதியாக 2020 ஏப்ரல், ராமகுண்டத்திற்கு வடக்கே 4.8 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நிலநடுக்கத்தின் மையம் ஆப்கானிஸ்தானில் 36.49 டிகிரி வடக்கு மற்றும் 71.27 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையில் 165 கிமீ ஆழத்தில் இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# சபரிமலை யாத்ரிகர்கள் பஸ்மீது லொறி மோதியதில் ஒருவர் உயிரிழப்பு, 16 பேர் காயம்

கேரளாவின் ஆரியங்காவு பழைய ரயில் நிலையம் அருகே கடந்த செவ்வாய்க்கிழமை, சபரிமலை யாத்ரிகர்களான 28 பேரை ஏற்றிச் சென்ற பஸ் மீது லொறி மோதியதில் ஒருவர் உயிரிழந்ததுடன் 16 பேர் காயமடைந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 3:45 மணியளவில் 28 யாத்ரீகர்களை ஏற்றிச் சென்ற பஸ் தங்கள் பயணத்தை முடித்துக்கொண்டு சேலம் நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளையிலேயே லொறி சாரதியின் கவனக்குறைவால் விபத்துக்குள்ளாகியது. இதன் காரணமாக பஸ் சுமார் 40 அடிக்கு கீழே சரிந்ததுடன் சேலத்தைச் சேர்ந்த தனபாலன் இறந்தார். மேலும் 16 பேர் காயமடைந்தனர். அவர்களில் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.



காயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவ சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் விபத்து ஏற்பட்டதற்கான காரணங்கள் குறித்து அதிகாரிகள் தீவிர விசாரணையை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# நிவாரணம் வழங்குமாறு கோரி மக்கள் மறியல் போராட்டம்

விழுப்புரம் மாவட்டம் அரக்கண்ட நல்லூர் பகுதியில் கனமழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் உரிய நிவாரணம் வழங்கக் கோரி நேற்று திருக்கோவிலூர் – விழுப்புரம் வீதியில் அமர்ந்து வீதி மறிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தென்மேற்கு வங்கக்கடலில் உருவான ஃபெங்கல் புயல் காரணமாக தமிழகத்தின் பல்வேறு வட மாவட்டங்களில் தொடர்ந்து கனமழை பெய்தது.

இதனால் பல்வேறு இடங்கள் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பேரிடரால் மொத்தம் 69 லட்சம் குடும்பங்களும், 1.5 கோடி மக்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புயல், வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக 5 இலட்சம் இந்திய ரூபாய் வழங்கவும் அதி கனமழையின் காரணமாக கடுமையான மழைப்பொழிவினை சந்தித்துள்ள விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில், இரண்டு நாட்களுக்கு மேல் மழை, வெள்ளம் சூழ்ந்து, வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக 2 ஆயிரம் இந்திய ரூபாய் வழங்கவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் விழுப்புரம் மாவட்டம் அரக்கண்ட நல் லூர் பகுதியில் கனமழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் உரிய நிவாரணம் வழங்கக் கோரி நேற்று திருக்கோவிலூர் – விழுப்புரம் வீதியில் அமர்ந்து வீதி மறிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். “உணவு குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் கூட நிறைவேற்றிக் கொடுக்கப்படவில்லை. கடந்த நான்கு நாட்களாக எந்தவொரு அரசு அதிகாரியும் வந்து பார்வையிடவில்லை” என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வீதி மறிப்பு போராட்டத்தால் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன் வீதியில் வாகனங்கள் அணிவகுத்து நின்றமை குறிப்பிடத்தக்கது.





# கேரளா விமான நிலையத்தில் இருவர் கைது; 14 அரிய வகை வெளிநாட்டுப் பறவைகள் மீட்பு

கேரள மாநில விமான நிலையத்தில் தாய்லாந்திலிருந்து சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்ட 14 அரிய வகை வெளிநாட்டுப் பறவைகள் சுங்கத்துறை அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திருவனந்தபுரத்தைச் சேர்ந்த சரத் மற்றும் பிந்து ஆகியோரே சூட்கேசில் மறைத்து வைத்து பறவைகளை கொண்டு வந்துள்ளனர். பறிமுதல் செய்யப்பட்ட பறவைகள் 25 ஆயிரம் இந்திய ரூபாய் முதல் 2 இலட்சம் இந்திய ரூபாய் வரையில் மதிப்புடையவை என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த பறவைகள் வனத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இச் சம்பவம் தொடர்பில் சுங்கத்துறை மற்றும் வனத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தென் கொரியாவில் அடுத்தடுத்து நடந்த திருப்பம் பதற வைத்த அந்த 12மணி நேரம்: நடந்தது என்ன?

## பதவி விலக்கப்படும் அபாயத்தில் ஜனாதிபதி





தென்கொரியாவில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு சில மணி நேரங்களில் எதிர்க்கட்சிகளின் போராட்டத்தால் அது ரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொலைகாட்சி வாயிலாக நேற்று முன்தினம் பொதுமக்களிடம் உரையாற்றிய தென்கொரிய ஜனாதிபதி யூன் சாக் யோல் வடகொரிய ஆதரவாளர்களை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்காகவும், அரசுக்கு எதிரான சக்திகளை ஒடுக்குவதற்காகவும் அவசரநிலை பிரகடனப்படுத்தப்படுவதாக அறிவித்தார்.

50 ஆண்டுகளில் தென்கொரியாவில் அவசரநிலை சட்டம் அமுல்படுத்தப்பட்டது இதுவே முதல்முறை. இந்த அவசரநிலை சட்டத்துக்கு எதிராக அந்நாட்டு நாடாளுமன்றத்தில் 190 எம்.பி.க்கள் வாக்களித்தனர்.

தொடர்ந்து நாடாளுமன்ற வளாகத்திலேயே போராட்டத்திலும் ஈடுபட்டனர். இந்த சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நாடாளுமன்ற நுழைவாயிலில் ஆயிரக்கணக்கான மக்கள் குவிந்து தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோலுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். உடனடியாக அங்கு இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டனர்.

ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் ஒரே நேரத்தில் நாடாளுமன்றத்துக்குள் நுழைய முற்பட்டதால் இராணுவத்தினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இதனையடுத்து ஜனாதிபதி யூன் இன் இந்த அவசரநிலை அறிவிப்பு செல்லாது என்று நாடாளுமன்ற சபாநாயகர் வூன் வொன் சிக் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்துக்கு வெளியே கூடியிருந்த போராட்டக்காரர்கள் பலரும் ஆரவாரம் செய்து கொண்டாடினர். இந்த அவசரநிலை பிரகடன விவகாரம் பூதாகரமானதைத் தொடர்ந்து அந்நாட்டு ஜனாதிபதி யூன் பதவி விலக வேண்டும் என்று கோரிக்கைகள் வலுப்பெற்றுள்ளன.

இதற்குமுன்னர் தென் கொரியாவை 20 ஆண்டுகாலம் ஆட்சி செய்துவந்த பார்க் சங் ஹீ 1979-ல் கொல்லப்பட்டபோது அங்கு அவசரகாலநிலை அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், தென் கொரிய ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்யும் தீர்மானத்தை அந்நாட்டின் எதிர்க்கட்சிகள் நாடாளுமனம் மீதான வாக்கெடுப்பு வரும் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளன. தென் கொரியாவின் ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்ய நாடாளுமன்றத்தில் 3-ல் இரண்டு பங்கு ஆதரவும், குறைந்தபட்ச 6 அரசியலமைப்பு நீதிமன்ற நீதிபதிகளின் ஆதரவும் தேவைப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# நமீபியா வரலாற்றில் ஜனாதிபதியாக பதவியேற்கும் முதல் பெண்மணி



நமீபியா நாட்டில் கடந்த மாதம் 27ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் தென்மேற்கு ஆபிரிக்காவின் மக்கள் அமைப்பு கட்சி(SWAPO) சார்பில் போட்ட துணை ஜனாதிபதி நெடும்போ நந்தி தைத்வா 57.3% வாக்குகளை பெற்று அபார வெற்றி பெற்றுள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் நமீபியாவின் ஜனாதிபதியாக பதவியேற்கும் முதல் பெண் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார். அதே போல் ஆபிரிக்க கண்டத்தின் 2ஆவது பெண் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார். அதே சமயம், தேர்தல் முடிவுகளுக்கு அந்த நாட்டின் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

முன்னதாக தேர்தலில் வெற்றி பெற்றால் நாட்டில் உள்ள வேலையின்மை விகிதத்தை குறைக்கவும், எண்ணெய் மற்றும் எரிவாயு தொழில்களை மேம்படுத்தவும், நாட்டின் பொருளாத வளர்ச்சியில் கவனம் செலுத்தவும் திட்டமிட்டுள்ளதாக நெடும்போ நந்தி தைத்வா கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நள்ளிரவில் பூமி மீது மோதிய விண்கல்..

# தீப்பிழம்பாக ரஷியாவில் விழும் பிரம்மிப்பூட்டும் காட்சிகள்





சூரிய மண்டலத்தில் சிறுகோள்கள் என அழைக்கப்படும் விண்கற்கள் சுற்றி வருகின்றன. இந்த விண்கற்கள் அடிக்கடி, புவி ஈர்ப்பு விசைக்குள் வந்த நிலையில் விண்கல் ஒன்று நேற்று புவி வட்டப்பாதைக்குள் வந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். 70 செ.மீட்டர் விட்டம் கொண்ட இந்த விண்கல் நள்ளிரவு வளிமணடலத்திற்குள் நுழையலாம் என்றும் தெரிவித்து இருந்தனர்.

அதன்படி அந்த விண்கல் நேற்று இரவு வளிமண்டலத்திற்குள் நுழைந்த துகண்டுபிடிக்கப்பட்ட 12 மணி நேரத்துக்கு பிறகு அந்த விண்கல்லானது ரஷியாவின் யாகுடியா பகுதியில் விழுந்துள்ளது.

பூமியின் வளிமண்டலத்தில் நுழைந்தவுடன், விண்கல் பல துண்டுகளாக சிதைந்து அங்குள்ள வனப்பகுதியில் தீப்பிழம்பாக சிதறி விழுந்தது. இதுதொடர்பான பிரம்மிப்பூட்டும் காட்சிகளும் வெளியாகி உள்ளது.

அதிர்ஷ்டவசமாக விண்கல்லின் அளவு மற்றும் அது விழுந்த இடம் காரணமாக பெரிய சேதம் எதுவும் ஏற்படவில்லை. இந்த விண்கல் பெரிதாக பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் ஒரு தீப்பந்து போல காட்சியளித்துவிட்டு சென்றுவிடும் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# மலேசியா - தெற்கு தாய்லாந்தில் வெள்ளம்

## 30க்கு மேற்பட்டோர் உயிரிழப்பு



மலேசியாவில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் கனமழையானது மலேசியாவின் கிழக்கு கடற்கரை பகுதிகளில் கடந்த 6 மாதங்களில் பெய்த மழையை கடந்த 5 நாட்களில் கொட்டித் தீர்த்த மலை அதிகமாகும். இந்த கனமழை காரணமாக மலேசியாவின் கிளந்தான், திரங்கானு உள்ளிட்ட மாகாணங்களில் உள்ள பல்வேறு இடங்களில் மோசமான வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

கனமழையால் மலேசியாவின் உள்கட்டமைப்பில் ஏற்பட்ட பாதிப்புகளை சரிசெய்ய சுமார் ஒரு பில்லியன் ரிங்கிட்(224 மில்லியன் டாலர்) செலவாகும் என மலேசிய பிரதமர் அன்வர் இப்ராகிம் தெரிவித்துள்ளார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியாமல் தவித்து வருகின்றனர். அவர்களை மீட்பு படகுகள் மூலம் மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதே போல் தெற்கு தாய்லாந்திலும் கனமழை கொட்டித் தீர்த்துள்ளது. கனமழை மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளில் சிக்கி மலேசியா மற்றும் தெற்கு தாய்லாந்தில் இதுவரை சுமார் 30 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. அரசு சார்பில் ஏற்படுத்தப்பட்ட 491 நிவாரண முகாம்களில் சுமார் 34 ஆயிரம் பேர் தங்கவைக்கப்பட்டுள்ளதாக மலேசிய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

# கடல் பாறையில் தியானம் செய்த நடிகை

## அடித்த ராட்சத அலையில் சிக்கி பரிதாபமாக பலி

அழகிய கடற்கரையில் அமர்ந்து பிரபல ரஷ்ய நடிகை ஒருவர் யோகா செய்து கொண்டு இருந்த போது எதிர்பாராத விதமாக ராட்சத அலை ஏற்பட்டுள்ளது. இந்த அலையில் சிக்கிய ரஷ்ய நடிகை பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.



இது தொடர்பான அதிர்ச்சி அளிக்கும் காணொளி ஒன்று இணையத்தில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதாவது, ரஷ்ய நடிகை ஒருவர் கடலுக்கு மிக அருகே அமர்ந்து யோகா செய்த நிலையில், கண்ணிமைக்கும் நேரத்தில் திடீரென எழுந்த ராட்சத அலையில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் பரிதாபமாக உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# கூகுளில் மறுதிருமணம் பற்றி தேடிய நபர் மனைவி கொலை வழக்கில் கைது

அமெரிக்காவின் வேர்ஜீனியா மாகாணத்தில் மனஸ்சாஸ் பார்க் பகுதியில் வசித்து வருபவர் நரேஷ் பட் (வயது 33). இவருடைய மனைவி மம்தா காப்லே பட் (வயது 28). நேபாள நாட்டை சேர்ந்த இவர் தாதியாக பணியாற்றி வந்துள்ளார். கடந்த ஜுலை 29ஆம் திகதி மம்தா திடீரென காணாமல் போயுள்ளார்.



ஆனால், அதுபற்றி கவலைப்படாத நரேஷ், பொலிஸில் புகார் தெரிவிக்கவில்லை. அதற்கு மாறாக, கூகுளில் மறுதிருமணம் செய்வது பற்றி தேடியுள்ளார். மனைவி மரணம் அடைந்து விட்டால் கடன் என்னவாகும்? மனைவி காணாமல் போய் விட்டால் என்ன நடக்கும்? என்றெல்லாம் தேடியிருக்கிறார். மனைவி காணாமல் போய் விட்டார் என கூறப்படும் நாட்களில் இருந்து சில நாட்களாக சந்தேகத்திற்குரிய பல நடவடிக்கைகளில் நரேஷ் ஈடுபட்டு உள்ளார்.

அத்துடன் அவர் கடைக்கு சென்று கத்திகளை கொள்வனவு செய்துள்ளார். ஆனால், பொலிஸ் விசாரணையில் இருவரும் பிரிவதற்கான முயற்சியில் இருக்கிறோம் என கூறியுள்ளார். மம்தா உயிருடன் இருக்கிறார் என நீதிமன்றத்தில் நரேஷின் வழக்கறிஞர்கள் வாதிட்டனர்.

ஆனால், மரபணு சான்றின்படி அவர்களுடைய வீட்டில் மம்தாவின் இரத்தம் கிடைத்துள்ளது. இதனால், அவர் கொல்லப்பட்டு, உடல்கள் துண்டுகளாக்கப்பட்டு உள்ளன என குற்றச்சாட்டு கூறப்படுகிறது. அவருடைய உடல் கிடைக்கா விட்டாலும் இந்த சான்றுகள் வழக்கிற்கு வலு சேர்க்கிறது என அதிகாரிகள் தெரிவித்தனர்.கடந்த ஆகஸ்டு 22ஆம் திகதி பொலிஸார் நரேஷின் வீட்டில் சோதனையிட்ட பின்னர் அவரை கைது செய்தனர். மனைவி வேலைக்கு வராத நிலையில், நிறுவனத்தினர் அதனை பொலிஸாரிடம் தெரிவித்து விசாரணை நடைபெற்றிருந்தது. இந்நிலையிலேயோ பொலிசார் மேற்கொண்ட விசாரனையில் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 10 நாட்களில் 143 பேர் பலி! காங்கோவில் பரவும் மர்ம நோய்! உலக நாடுகள் அதிர்ச்சி.. அடுத்த பெருந்தொற்று எனவும் சந்தேகம்



ஹொங்கோவில் பெயர் அறியப்படாத மர்ம நோய் ஒன்று பரவி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 10 நாட்களுக்குள் இந்த நோய் 143 பேரைக் கொன்றதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிக காய்ச்சல், கடுமையான தலைவலி, சளி, உடல் வலி போன்ற அறிகுறிகள் இருப்பதாக காங்கோவில் உள்ள குவாங்கோ மாகாணத்தின் துணை ஆளுநரான ரெமி சாகி மற்றும் மாகாண சுகாதார அமைச்சர் அப்பல்லினேர் யூம்பா ஆகியோர் தெரிவித்து உள்ளனர்.

200க்கும் அதிகமானோர் இந்த நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக கூறப்படுகிறது. அவர்களின் எச்சில் மற்றும் ரத்த மாதிரிகளை சேகரித்து நோயை அடையாளம் காண பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான அறிகுறிகள் பின்வருமாறு,

தலைவலி, தும்மல், மூக்கு அடைப்பு , தொண்டை புண், கண்களில் நீர் வடிதல், மூக்கிலிருந்து தொண்டைக்குள் சளி செல்லுதல் போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டு உள்ளதாக கூறப்படுகிறது. இதனால் பலருக்கும் காய்ச்சல் ஏற்படுகிறது. இது சாதாரண காய்ச்சல் போல இல்லாமல் மக்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். அதோடு இது இயல்பு வாழ்க்கையை முடக்கும் விதமாக அமைந்து உள்ளது.

எனவே குறித்த நோய் ஏற்பட்டவர்கள் குருதி மாதிரிகளை சேகரித்து நோயை அடையாளம் காண மருத்துவ குழு ஒன்று Panzi சுகாதார துறைக்கு உத்தரவிட்டுள்ளதுடன்

உலக சுகாதார ஸ்தாபனமும் இதனால் அதிர்ச்சிக்கு உள்ளாகி இருப்பதாகவும் அடையாளம் தெரியாத நோய் எது என்று தெரிந்து கொள்வதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.”

# ஐசிசி டெஸ்ட் தரவரிசை: முதலிடத்தில் ஜோ ரூட்




நியூஸிலாந்துக்கு எதிரான இங்கிலாந்தின் வெற்றி மற்றும் இலங்கைக்கு எதிரான தென்னாப்பிரிக்காவின் வெற்றிகளைத் தொடர்ந்து அண்மைய ஐசிசி டெஸ்ட் தரவரிசையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

அண்மைய ஐசிசியின் டெஸ்ட் தரப்படுத்தலில் துடுப்பாட்ட வீரர்களில் இங்கிலாந்து நட்சத்திரம் ஹாரி புரூக் முன்னிலை இடத்தை பெற்ற பின்னர் உலகின் சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரரான ஜோ ரூட்டுக்கு மிகப்பெரிய சவாலாக மாறினார்.

கிறிஸ்ட்சர்ச்சில் நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட்டில் இங்கிலாந்து அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதல் இன்னிங்சில் 171 ஓட்டங்களை எடுத்த போது புரூக் தனது ஏழாவது டெஸ்ட் சதத்தை பூர்த்திசெய்தார்.

மேலும், டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான அண்மைய தரவரிசையில் இரண்டு இடங்கள் முன்னேறி அவர் இரண்டாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். இதேவேளை அதே, இன்னிங்ஸில் இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் ஜோ ரூட், டக்கவுட் முறையில் ஆட்டமிழந்தார். இதன்மூலம், இங்கிலாந்தின் மூத்த துடுப்பாட்ட வீரருக்கும் ப்ரூக்கிற்குமான இடைவெளி வெறும் 41 புள்ளிகள் வித்தியாசமே உள்ளன.

இந்நிலையில் தற்சமயம் ரூட் 895 புள்ளிகளுடன் தரவரிசையில் முதலிடத்திலும், ப்ரூக் 854 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலுமுள்ளனர் . ப்ரூக்கன் எழுச்சியால் இந்திய இளம் வீரர் யஷஸ்வி ஜெய்ஸ்வால் டெஸ்ட் துடுப்பாட்ட தரவரிசையில் நான்காவது இடத்திற்கு தள்ளப்பட்டார்.

அதேநேரத்தில், நியூஸிலாந்துக்கு எதிரான வலுவான வெற்றியின் பின்னர், இங்கிலாந்து ஜோடியான ஒல்லி போப் எட்டு இடங்கள் முன்னேறி 32 ஆவது இடத்திற்கும் மற்றும் அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸ் ஏழு இடங்கள் முன்னேறி 34 ஆவது இடத்தையும் பிடித்தனர்.

இதேவேளை, தென்னாப்பிரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான முதல் டெஸ்ட் நிறைவைத் தொடர்ந்து டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களின் முதல் 10 இடங்களுக்குள் மேலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தென்னாபிரிக்காவின் 233 ஓட்டங்கள் வெற்றியுடன் இரு இன்னிங்ஸுகளிலும் அணித் தலைவர் பவுமா 70 மற்றும் 113 ஓட்டங்களைப் பெற்றார். இதனால், அவர் தரவரிசையில் 14 இடங்கள் முன்னேறி 10 ஆவது இடத்தை பிடித்தார்.

அதேநேரம், தினேஷ் சண்டிமால் இரண்டு இடங்கள் முன்னேறி 17 ஆவது இடத்திற்கும், டிரிஸ்டன் ஸ்டப்ஸ் 29 இடங்கள் முன்னேறி 42 ஆவது இடத்துக்கும் முன்னேறினர்.

அதே சமயம் இங்கிலாந்து ஜோடியான பிரைடன் கார்ஸ் 21 இடங்கள் முன்னேறி 43 ஆவது இடத்தையும், ஷோயப் பஷீர் நான்கு புள்ளிகள் முன்னேறி 48 ஆவது இடத்துக்கும் முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பார்வையற்றோர் டி20 உலகக்கிண்ணம் சம்பியன் மகுடம் சூடியது பாகிஸ்தான்




(அரபாத் பஹுர்தீன்)

பார்வையற்றோருக்கான டி20 உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் பங்களாதேஷ் அணியை 10 விக்கெட்டுக்களால் வீழ்த்திய பாகிஸ்தான் பார்வையற்றோர் அணி சம்பியன் மகுடத்தினை வெற்றி கொண்டு அசத்தியது.

பாகிஸ்தானில் கடந்த நவம்பர் மாதம் 23ஆம் திகதியிலிருந்து நேற்று முன்தினம் (3) வரை இடம்பெற்ற நான்காவது பார்வையற்றோருக்கான டி20 உலகக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், தென்னாபிரிக்கா மற்றும் ஆப்கானிஸ்தான் என மொத்தம் 7 அணிகள் பங்கேற்றிருந்தன.

இப்போட்டித் தொடர் பாகிஸ்தானில் இடம்பெற்றிருந்தது. நடப்புச் சம்பியனான இந்திய அணி இத்தொடரில் பங்கேற்றிருந்தமை விஷேட அம்சமாகும்.

மேலும் லீக் முறையில் இடம்பெற்ற இத் தொடரின் முதல் சுற்று முடிவில் முதல் நான்கு அணிகள் அரையிறுதிக்குத் தகுதிபெற்று, அரையிறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் பார்வையற்றோர் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுக் கொண்டன.

அதற்கமைய நேற்று முன்தினம் (3) லாஹூர் மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்களில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் ஆரிப் ஹுசைன் 54 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பாபர் அலி 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின்னர் 140 என்ற இலக்குடன் களம் நுழைந்த பாகிஸ்தான் பார்வையற்றோர் அணிக்கு ஆரம்ப விக்கெட் ஜோடியான நிஸார் அலி அரைச்சதம் கடந்து 72 ஓட்டங்களையும், ஷப்தர் 47 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்து தமக்கிடையில் பிரிக்கப்படாத 140 ஓட்ட இணைப்பாட்டத்தைப் பதிவு செய்ய பாகிஸ்தான் பார்வையற்றோர் அணி 10 விக்கெட்டுக்களால் மிக இலகு வெற்றியைப் பெற்று கிண்ணத்தை கைப்பற்றியிருந்தது.

## தைஜுல் இஸ்லாம் அபார பந்துவீச்சு...

# மேற்கிந்திய தீவுகளை வீழ்த்தி தொடரை சமன் செய்த வங்காளதேஷ்

வங்காளதேஷ் கிரிக்கெட் அணி மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட்,




3 ஒருநாள் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.இதில் வங்காளதேச அணி முதலில் துடுப்பெடுத்தாடியது அதன்படி வங்காளதேசம் தனது முதல் இன்னிங்சில் 71.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 164 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களை இழந்தது.

வங்காளதேசம் தரப்பில் அதிகபட்சமாக ஷத்மான் இஸ்லாம் 64 ஓட்டங்களை பெற்றார். இதவேளை மேற்கிந்திய தீவுகள் தரப்பில் ஜெய்டன் சீல்ஸ் 4 விக்கெட்,

ஷமர் ஜோசப் 3 விக்கேட்டுக்களை வீழ்த்தினர். தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை ஆரம்பித்த மேற்கிந்திய தீவுகள் தனது முதல் இன்னிங்சில் 146 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களை இழந்தது. மேற்கிந்திய தீவுகள் தரப்பில் அதிகபட்சமாக கீசி கார்டி 40 ஓட்டங்களை எடுத்தார். வங்காளதேசம் தரப்பில் நஹித் ராணா 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதன் மூலம் 18 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது 2வது இன்னிங்சை தொடங்கிய வங்காளதேசம் நேற்றைய 3ம் நாள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 193 ஓட்டங்களை எடுத்திருந்தது.

வங்காளதேசம் தரப்பில் ஜாக்கர் அலி 29 ஓட்டங்களுடனும் , தைஜுல் இஸ்லாம் 9 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இன்று 4ம் நாள் ஆட்டம் நடைபெற்றது. இதில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய செய்த வங்காளதேசம் தனது 2வது இன்னிங்சில் 268 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களை இழந்தது . வங்காளதேசம் முதல் இன்னிங்சில் பெற்ற 18 ஓட்டங்கள் முன்னிலையுடன் சேர்த்து மேற்கிந்திய தீவுகள் 287 ஓட்டங்களுடன் வெற்றி இலக்காக நிர்ணயித்தது. அந்த இலக்கை நோக்கி களம் இறங்கிய வெஸ்ட் இண்டீஸ் வங்காளதேசத்தின் அபார பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது.

வெறும் 50 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்தமேற்கிந்திய தீவுகள் தனது 2வது இன்னிங்சில் 185 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களை இழந்தது. இதன் காரணமாக வங்காளதேசம் 101 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வங்காளதேசம் அபார வெற்றி பெற்றது.

மேற்கிந்திய தீவுகள் தரப்பில் அதிகபட்சமாக கெவம் ஹோட்ஜ் 55 ஒட்டகளை எடுத்தார். வங்காளதேசம் தரப்பில் அதிகபட்சமாக தைஜுல் இஸ்லாம் 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இந்த வெற்றியின் காரணமாக 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 சமனில் முடிந்தது. அடுத்ததாக இவ்விரு அணிகள் இடை அடுத்ததாக இவ்விரு அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் வரும் 8ம் தேதி தொடங்குகிறது.

# தோனியுடன் பேசி 10 வருடங்களாகிறது முன்னாள் வீரர் ஹர்பஜன் சிங் குமுறல்

இந்தியாவின் நட்சத்திர கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் தோனியுடன் 10 வருடங்களாகப் பேசவில்லை என ஹர்பஜன் சிங் அதிர்ச்சி தகவலைப் பகிர்ந்துள்ளார். இந்திய முன்னாள் நட்சத்திர பந்து வீச்சாளரான ஹர்பஜன் சிங் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் இதை தெரிவித்துள்ளார்.

2007 டி20 உலகக் கோப்பை மற்றும் 2011 ஒருநாள் உலகக் கோப்பையை வென்ற இந்திய அணியில் ஹர்பஜனும் எம்எஸ் தோனியும் ஒன்றாக செயல்பட்டவர்கள்.







இந்நிலையில் 2018-2020 வரை சென்னை சூப்பர் கிங்ஸில் விளையாடிய காலங்களில் தானும் எம்.எஸ் தோனியும் மைதானத்தில் பேசினோமே தவிர களத்திற்கு வெளியே பேசிக்கொள்வதில்லை என்று ஹர்பஜன் தெரிவித்துள்ளார்.

“அவருடன் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை. எனது தொலைபேசி அழைப்பை எடுப்பவர்களுக்கு மட்டுமே நான் போன் செய்வேன், மற்றவர்களிடம் பேச எனக்கு நேரமில்லை.என்னுடன் நண்பர்களாக இருந்தவர்களுடன் நான் தொடர்பில் உள்ளேன். உறவு என்பது இருவருக்கிடையிலான கொடுக்கல் - வாங்கல் சம்பந்தப்பட்டது.

நான் உங்களுக்கு மதிப்பளிப்பதாக இருந்தால், பதிலாக நீங்கள் எனக்கும் மதிப்பளிப்பீர்கள் என்று நான் நம்ப வேண்டும், அல்லது எனக்கு பதில் அளிப்பீர்கள் உறுதியாகத் தெரிய வேண்டும். நான் உங்களுக்கு ஒன்று அல்லது இரண்டு முறை போன் செய்தும் நீங்கள் பதிலளிக்கவில்லை என்றால், நான் உங்களை தேவை இருந்தால் மட்டுமே சந்திப்பேன் மற்றபடி எதுவும் இல்லை என்று ஹர்பஜன் அந்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

# ஐபிஎல்லில் ஏலம் போகாதவர் சாதனை: 40 பந்துகளுக்குள் 2 சதம்



ஐபிஎல் ஏலத்தில் விலை போகாத குஜராத் அதிரடி பேட்ஸ்மேன் உர்வில் பட்டேல் 40 பந்துகளுக்குள் 2வது முறையாக சதமடித்து டி20 வரலாற்றில் மகத்தான சாதனை படைத்துள்ளார். சையத் முஷ்டாக் அலி கோப்பைக்கான டி20 கிரிக்கெட் போட்டிகள் மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் நடந்து வருகின்றன. திரிபுரா அணிக்கெதிராக கடந்த வாரம் நடந்த டி20 போட்டியில் குஜராத் துவக்க வீரராக களமிறங்கிய உர்வில் பட்டேல் 28 பந்துகளை மட்டுமே எதிர்கொண்டு சதமடித்து புதிய சாதனை படைத்திருந்தார். இந்நிலையில் இந்தூரில் நேற்று நடந்த போட்டியில் உத்தரகாண்ட் அணிக்கெதிராக குஜராத் அணி மோதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 05ம் திகதி வியாழக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.